Registered at the G. P. O. AS A NEWSPAPER

சன்மார்க்கபோதினி.

பத்திரவிலைவிவரம்
வருஷத்துக்கு ரூபா ௧-௫0
தபாற் செலவு
இலங்கைக்கு சதம் ௫0
இந்தியாவுக்கு ௸ சதம் ௫0
பிறதேசங்களுக்கு ௭௫

SANMARKA POTHINI

விளம்பரவிலைவிவரம்
வரி ஒன்றுக்குச் சதம் 10
௫0 க்குமேல்ஒருவரிக்கு 9
௱ க்கு மேல்........8
இணைப்பிரசுர மொவ்வொன்றிற்கும்௩-௫0 ஒன்று

ஒன்றுவிட்டொருசெவ்வாய்க்கிழமைகளிற் பிரசுரஞ்செய்யப்படும்

சாதுசங்கஞ் சன்மார்க்க சாதனம்.

Published on every other Tuesday

VOL. XXXII. JAFFNA August 22th 1916 No 17

௩௨ம் புத்தகம் யாழ்ப்பாணம் ௧௯௧௬ம் ௵ ஆவணி௴ ௨௨௳ செவ்வாய்க்கிழமை சங்கியை ௧௭

நமது பத்திரிகை.

நமது பத்திரிகையை நமதுவிதானப்படி வேறொருவர் நடத்த முன்வந்திருப்பதால் நம்மிடம் முற்பணஞ் செலுத்தினவர்களுக்கன்றி மற்றையோருக்கு அவர் பத்திரிகை அனுப்பிவைக்கக்கடனாளியல்ல. ஆதலால் அடுத்த பத்திரிகைக்குமுன் கிரமமனுப்பாதோர் அனுப்பிவைக்கும்படி கேட்கப்படுகிறார்கள். புதிதாய்க் கைபொப்பக்காரராய்ச் சேர்வோர் கட்டாயமாய் முற்பணம் அனுப்பவேண்டும். (மனேஜர்)

நமக்குப் பத்திரிகைகள் காயிதங்கள் அனுப்புவோர்க்கு.

எமக்குப் பத்திரிகைகள் காயிதங்கள் அனுப்புவோர் புத்தூர் என்று எழுதாமல் அச்சுவேலி யாழ்ப்பாணம் என்றுமாத்திரம் எழுதுக. மொனியோடர் றிஜிஸ்ரர்ப்பார்சல் அனுப்புவோர்கள்மாத்திரம் புத்தூர் என்று எழுதுக. பத்திரிகைக்கு எழுதப்படுங் கடிதங்களைப் பத்திராதிபருக்கும் மொனியோடர் முதலியவைகளை மனேஜருக்கும் அனுப்புக. (மனேஜர்)

யதார்த்தவாதி வெகுசனவிரோதி.

தற்காலம் பொய்யருடன் பொய்யராயும் மெய்யரிடம் மெய்யராயும் நின்று தருணத்துக்கேற்றபடி நடிப்பவரின் காலமன்றி யதார்த்தவாதிகளின்காலமாய்க் காணப்படவில்லை. நீதிஸ்தலத்திலுமுதலாய்ப் "பொய்யுடையொருவன்சொல் வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே" என்று முடிந்துவிடுகிறது. எவ்விடத்திலும் எவர்முன்னிலையிலும் சிலர் மெய்யேபேசுவர். அது "ஆசாடபூதிகள்போன்றோர்க்கு மிகு வெறுப்பாயிருக்கும். சிலர்அறியாமையினாலும் சிலர் அறிந்தும் மனஅழுக்காறினாலும் தங்நிலையைத்தழுவியும் யதார்த்தவாதியை இகழுவர். அதனால் பலரும் ஏகோபித்து யதார்த்தவாதியை வெறுக்கக் காரணமாய் விடுகிறது. அப்படியாயினும் உண்மையையே அணிகலமாய்க்கொண்டவர் அவ்வீனமான இகழ்ச்சியைப் பறுவாயின்னலாகாது. நாய்குரைத்தாற்போல் சந்திரனுக்குக் கேடில்லை. யதார்த்தவாதியின் வாயை அரசபிரமாணம் அடக்கினாலன்றி வேறொருவரால் அடக்கமுடியாது. யதார்த்தவாதிகளால் உலகுக்கு நன்மையுண்டு. ஆனால் அவர் உலகத்தோடொத்து அமராடியே செயம்பெறவேண்டும். நம் நண்பரே எல்லாவற்றிலும் ஆராய்ச்சி வேண்டும். ஒருவரைக் குறித்துப் பேசும்போது தக்க ஆராய்ச்சியுடன் பேசுங்கள். "பொய்யிருந்து புலம்பும் மெய்யிருந்து விழிக்கும்" ஆதலால் யதார்த்தவாதியின் மேன்மை நாளடைவில் பிரகாசிக்கும். அன்பரே! "யாகாவாராயினும் நாகாக்க" என்னும் திருவள்ளுவர் கூற்றைக் கடைப்பிடித்தொழுகுங்கள்.

"யதார்த்தமே செயம்பெறும்"

சுந்தரன் செய்த தந்திரம்.

(16ம் இலக்கப் பத்திரத்தொடர்ச்சி)

சோமநாதபிள்ளையின் வார்த்தையைக் கேட்ட ஆராய்ச்சியார் சில சேவகருடன் தொல்புரஞ்செல்லப் புறப்பட்டார். அதற்கிடையில் தொல்புர ஆராய்ச்சியும் சுந்தரனின் வீடுவந்துசேர்ந்து சுந்தரனிடம் உபகாரம் பெறுபவராதலால் "கக்கினோர் காவிழந்தார்" என்றாற்போலச் சுந்தரனைக் காக்க விரும்பி, ஓய் பரிகாரியாரே சாஸ்திரங் கேட்கவந்தால் சாஸ்திரியின்பேச்சுக் கடங்கித்தானே கேட்கவேண்டும். நீர் என் வீண்சோலிபிடிக்கிறீர்; உமக்குச் சாஸ்திரம் பிடியாவிடில் உமதுபாட்டில் போய்விடுமென்று நியாயம்முடித்தார். அதைக்கேட்ட வைத்தியர் நீரும் கூட்டாளிபோற தோற்றுகிறது. நான் இந்தத் தந்திரிக்கு அந்தரம்தேடியே முடிக்கிறேன் என்றார்; அதற்கு ஆராய்ச்சியார் பின்னை நீர் விடுகிறீரோ? சாஸ்திரியாரைப் பேர்த்துவிடுவீர்போலத்தானிருக்கிறதென்று பரிகாசித்தார். உடனே வைத்தியர் தன்னையறிந்த சிலர்க்கும் மூழாய் ஆராய்ச்சியாருக்கும் ஆளனுப்பினார். பின்பு தொல்புர ஆராய்ச்சியாருக்கும் இவருக்கும் வாக்குவாதம்கடந்து ஒருவரிலொருவர் நெருங்கிவிட்டார்கள். அதற்கிடையில் வைத்தியரின் இஷ்டர்கள்பலர்வந்து சேரவே இருக்கிற நெருக்கத்தையும் வைத்தியர்க்காய்வந்த சனப்பெருக்கத்தையும் தம்மாட்களின் சுருக்கத்தையுங்கண்டு ஆராய்ச்சியார் தலைதூங்கிக் "காலத்துக்குத் தக்க கோலமாய்ச் சமாளித்துக்கொண்டு வெளியே போய்விட்டார். அத்தருணம் மூழாய் ஆராய்ச்சியார்வந்து நடந்த சங்கதிகளை விசாரித்தபின் சுந்தரனைக் கூப்பிடவே அவன் அங்கு காணப்படவில்லை. எங்கென்று சுந்தரனின் [illegible] அவர் ஆராய்ச்சியாரிடம் போனார் என்றாள். பின்பு ஆராய்ச்சியார் வைத்தியரைநோக்கி நீர் இவனில் அனுப்புக்கும் வலோற்காரச் செயலுக்கும் வழக்கெடும் இங்கேன் வீணாய் நிற்கிறீரென்று வைத்தியரையுங் கூட்டிக்கொண்டு புறப்பட்டுவந்தார்கள். வரும்வழியில் சோமநாதபிள்ளையும் பெரியஆராய்ச்சியும்சேவகரும் "கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டாற்போல" எதிரேவரக்கண்டு தாபரித்துச்சலாஞ்செய்தார்கள். ஆராய்ச்சியாரும்மகிழ்ந்து மூழாய்ஆராய்ச்சியாரைத்தம்முடன்வரும்படிகேட்டார், எவ்விடத்திற்குஎன்ன? தொல்புரத்துக்கு என்றார். சுந்தரன்வீட்டுக்கா என்றார்? ஆராய்ச்சியாரோ சற்றுநேரம் மலைத்துநின்று ஏனப்படிக்கேட்கிறீர்? நாங்கள் வருவதை அவன் அறிவானோ என்றார். அதற்கு மூழாய்ஆராய்ச்சியார் உத்தரமாக அவனுக்குத்தெரியாது அவன் உம்மை அனுப்பிப் பொருள்பறிக்கிறானென்று இத்தவைத்தியர் ஆளனுப்பி அங்குபோய் வருகிறேன் என்றார். இவர்தானா அராலியில் வைத்தியர்என்று பெரியஆராய்ச்சியார் சொல்லிவிட்டுநீங்களும்கூடவாருங்கள்என்று அழைத்துக்கொண்டுவிரைந்துசென்றார்கள். அவ்வண்ணமே சுந்தரனின் வீடுசேர்ந்தவுடன் கூடவந்த சேவகரை நாலுபக்கத்துக்கும் அனுப்பிக் காவல்நிற்கும்படி செய்தபின் தொல்புர ஆராய்ச்சியாருக்கு ஆளனுப்ப அவரும் வந்துசேர்ந்தார். சேர்ந்தவுடன் பெரிய ஆராய்ச்சியாரையும் கைவிலங்குகளையும் சேவகரையும் சனக்கூட்டத்தையுங்கண்டு "முதுகிலே புண்ணுண்டானால் காடுஅழைப்பயம்" என்றாற்போலத் திகைத்தும் "பதறுநகாரியம் சிதறும்" என்றபடி மனதைத் திடப்படுத்திக்கொண்டு பெரிய ஆராய்ச்சியாருக்குச்சலாம்செய்தார், உடனே வாருமென்று கூட்டிக்கொண்டு சுந்தரன்வீட்டுள்நுழைந்து அவன் மனைவியைநோக்கிச்சுந்தரன்எங்கேயென்றுகேட்டார். அதற்கவள் சற்றுநேரத்தின்முன் புறப்பட்டார் எங்கேயோ தெரியாதென்றாள் மூழாய்விதானை அவளைநோக்கி நீ ஆராய்ச்சியார் வீட்டுக்குப் போனதென்று எனக்குச்சொன்னாயே என்றார். அதற்கவள் இங்கே கலாதியாயிருக்கபடியால் ஒருவேளை ஆராய்ச்சியார் வீட்டுக்குப் போனாராக்குமென்றுநினைத்தேன். ஆராய்ச்சியார் இங்கேநிற்கிறார். அவருடன் வராததினால் போகவில்லையென்று நினைத்தேன் என்றாள். பெரியஆராய்ச்சியார் தொல்புர ஆராய்ச்சியைநோக்கிச் சுந்தரன் உம்மிடம் வந்தானோ என்றார். அவர் வரவில்லையென்னவே பெரிய ஆராய்ச்சியார் உத்தரமாக "நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்" அதுபோல் தன்மேல் குற்றமில்லாவிடின் மறைவானேன்? அவன்போகட்டும் பின்பு பார்ப்போம் என்று சொன்னார். (வரும்)

யாழ்ப்பாணம்.

வாச்சி—சிறுமழைவருஷித்தது. இன்னும் மழைக்கோலமுண்டு. சின்னமுத்தாதிய ரோகங்களால் சிறுவர் பிடிக்கப்படுகிறார்கள்.

விவாகம்—பொலிசுக்கோட்டு முதலியாராயிருந்து காலஞ்சென்ற மெஸ, கதிர்காமரின் புத்திரன் பிறக்றர் மெஸ, சாம் ஜே. சீ. கதிர்காமர் அவர்களுக்கும், இலங்கைப் புகைக்கப்பற்கொம்பனி ஏசன்றரான மெஸ, எட்வேட் பொன்னுச்சாமி மேதாவர்களின புத்திரி மிஸ், எடித்ரோசாமொண்ட் பரிமளத்துக்கும் நவாலி அமரிக்கன்மிஷன் தேவாலயத்தில் காபந்தன விவாகச்சடங்கு நிறைவேறிற்று. அத்தருணம் ஆலயத்திலும் வீட்டிலும் யாழ்ப்பாணத்தின் எப்பகுதிகளிலுமிருந்துவந்த பிரபுக்கள் அசைமக்களாதிய பலர் சமுகமாயிருந்தனர். விவாகம் பரிமளிப்பாயும் மிகு சிறப்பாயும் நடைபெற்றது. வதுவரர் தீர்க்காயுசும் சற்புத்திர பாக்கியமும்பெற்று வாழுமாறு கடவுள் கிருபைசெய்வாராக.

உடையார்வேலை—காலஞ்சென்ற அச்சுவேலி உடையார் ஸ்ரீ வ. குசைப்பிள்ளையின் இடத்துக்கு அவரதுதம்பி ஸ்ரீ சின்னப்பரும், இளைப்பாறும் சிறுவிளான் உடையார் ஸ்ரீ பி. வல்லியாம்பிள்ளையின் இடத்துக்கு மாதகல்விதானை ஸ்ரீ கணபதிப்பிள்ளையும், நோய்வாய்ப்பட்டிருக்கும் மல்லாகம் ஸ்ரீ அங்கேலசஉடையாரிடத்துக்கு அவரது புத்திரனும் நியோகிக்கப்பட்டார்கள்.

வியாபாரசமுதாயம்—இச்சங்கத்தார் பங்காளிகளுக்கு 100 க்கு 12 வீதலாபங்கொடுக்கும்படி தீர்மானித்தனர். அன்றியும் சேமநிதியாய் 48295 ரூபா 84 சதம் இருக்கிறது. இதற்காக இச்சங்கத்திற்காய்த் தளராமுயற்சியுடன் பாடுபடும் மனேஜராதியோர் புகழ்ச்சிக்குரியரே.

சீனிக்கொம்பனி—இக்கொம்பனி சென்ற 8உ முதல் சீனிசெய்ய ஆரம்பித்திருக்கிறது.

கட்டாயப்படிப்பு—இச்சட்டத்தை யாழ்ப்பாணத்திலும் பாவிப்புக்குக்கொண்டுவர நமது ஏசன்றர் மணியகாரன்மார் கூடிய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை.

மெஸ, J. B. அரியநாயகம்—றெசில்ஜெனறல்ஆபீசின் மூன்றாங்கிளார்க்காயிருந்த இவர் அக்கவுண்டிஜெனறல் ஆபீசுக்கு மாற்றப்பட்டார். மெஸ், அரியநாயகமவர்களின் கெட்டித்தனத்துக்கும் வேறுபல நற்குணங்களுக்குமாக இரண்டு உபகாரச்சம்பளங்கள் கொடுக்கப்பட்டன. அவைகள் அவரின் உயர்ச்சிக்கு அத்தாட்சியாயிருக்கும். அவர்க்குப் புதிய கொலோனியல் கோற்றலிலே சிநேகிதர்களாயும் கூடவிருந்து வேலைபார்க்கும் உத்தியோகஸ்தர்களாயும் உபசாரவிருந்தளிக்கப்பட்டு அவர்பிரிவாலே றெசில்ஜெனறல்கந்தோர்ப் பகுதியாருக்குள்ள துயரத்தையுந் தெரிவித்தார்கள். இவர் நம்பத்திராபிமானியும் நேர்மை சுகுணமுதலிய லட்சணங்க ளமையப்பெற்றவருமாதலால் மேன்மேலும் உயர்வடையவேண்டுமென விரும்புகிறோம்.

இலங்கைச்சுப்பிரீங்கோட்டுநீதாசனம்—சுப்பிரீங்கோட்டுச் சிரேட்ட நீதிபதிஸ்தானம் சிலகாலம் காலியாயிருக்க அதில் டெங்கால உத்தியோகஸ்தரான நீதிபதி என்னிஸ என்பவரைவிட்டு நீதிபதி ஷா என்பவரை நியமித்தகாரணத்தை விளக்கப்படுத்தவேண்டுமென்றும் உயர்ந்த உத்தியோகங்களைவகிக்கும் நிர்வாக அதிகாரிகளின் நோக்கங்களுக்குமாறாக அவர் சிலவழக்குகளில் தீர்ப்புச்சொன்னதே காரணமென்று சந்தேகிக்க இடமாயிருக்கிறதென்றும் சட்டநிரூபணசபையில் கௌரவ இராமநாதன் பேசினார். அதை கௌரவ கிரீசியும் கௌரவ வாண்டர்வாலும் அநுவதித்தனர். அதற்குக் குடியேற்றநாட்டுக் காரியதரிசியான கௌரவ ஸ்டபட்ஸ்என்பவர் எழுந்து எந்த உத்தியோகஸ்தருக்கும் தமது உத்தியோகத்திலிருந்து கடமைபார்க்க உரித்துண்டன்றி வேறுவேலைக்கு உரித்துண்டென்று கொள்ளப்படாதென்றும் தக்கவரென்று காணப்படுபவர்களையே தேசாதிபதி [illegible]படுமென்றும் இன்னும் பலவிதமாயும் பேசினார். இதைக் கௌரவ இராமநாதன் ஆட்சேபித்தார். சம்மதம் எடுத்ததில் 8 பேர் சாதகமாகவும் 13 பேர் பாதகமாகவும்நின்றதால் பிரேரபனை ஒப்புக்கொள்ளப்படவில்லை.

நோய்தீர வுபாயம்.

அநேக ரோகங்களுக்கு மூத்திர உப்பு விஷமே (யூரிக் ஆஸிட் பாய்ஸன்) காரணம். தூர்ப்பலமாயும், ரோகம் முதிர்ந்தும் உள்ள மூத்திரப்பை தான் செய்யவேண்டியபடி செய்யாமல், ரத்தத்திலிருந்து மூத்திரத்தை வடிகட்டாதது ஆகிறது. உடம்பு முழுதும் சுகமாயிருக்கிறதற்கு முக்கியமான காரியம் மூத்திர விஷம் ரத்தத்திலிருந்து பிரிவதுதான்.

பலமில்லாமலும், ரோகம் நிறைந்தும் இருக்கிற மூத்திரப்பையின் லக்ஷணங் கேளுங்கள்:—முதுகுநோய், தூக்கம் பிடியாதிருத்தல், ஜலம் கொஞ்சமா யிறங்குவது, மூத்திரம் நிறமாறுதல், மூத்திரத்திலிருந்து புகை கிளம்புவது, எப்போதும் தாகம், ஆயாசம், பலவீனமான இருதயம், தலைநோவு; தைரியமில்லாமை, கண்பார்வையின் மந்தம், தலைச்சுற்று, கீல்களும், சதைகளும் புண்ணாகி அசைக்க முடியாமற் போவது, மறதி, சாதாரண பலவீனம் முதலானவை. இந்த லக்ஷணங்கள் உண்டானபோது, அசட்டை செய்துவிட்டால், கீழே சொல்லும் ரோகங்கள் தப்பாமல் உண்டாகும். மூத்திர ரோகம், திமிர்வாயு, மகோதரம், பகு மூத்திர ரோகம் முதலானவைகளும், ஸ்திரீரோகமென்று தப்பாக எண்ணிக்கொள்ளும் ரோகங்களும்.

(டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகுநோய் மூத்திரப்பை ரோக மாத்திரைகள், மூத்திரப்பையிலும், மூத்திர அவயவங்களிலும் புகுந்து, மூத்திர விஷத்தை ரத்தத்திலிருந்து பிரிக்கும். அது நடந்தால், சரீரசுகம் தப்பாமல் உண்டாகும். சுகமாய் இருக்கவேண்டுமானால் மூத்திரப்பை ரோகமடையாமல் வைத்துக்கொள்ளவேண்டும். மூத்திரப்பையை ரோகமடையாமல் காத்துக்கொள்வதற்கு ஏற்ற மருந்து (டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகு நோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகளே.

Doan's Backache Kidney Pills Co.
DOAN'S BACKACHE KIDNEY PILLS
KIDNEY COMPLAINTS

ஒரு புட்டி விலை, ரூபா. 2 0 0
6 புட்டியின் விலை, ரூபா. 10 8 0

இவை, சீமை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜண்ட் ஆன டப்பிளியு. ஏச். மில்லர் துரையவரிடத்திலும் கிடைக்கும்.

பரிதாபசங்கதி—மட்டுக்களப்பு அமிர்தகளித் தீர்த்தத்துக்குப்போன வண்ணார வாலிபனும் மனைவியும் சிமேந்திட்ட ஆற்றணையில் தங்கியிருக்க ஓர் முதலைவந்து மனைவியை இழுத்துப்போயிற்று. அவளின்பிரேதம் மூன்றும்நாள் கல்லாற்றில் காணப்பட்டது.

இந்தியா

கடுதாசிசெய்யும்யந்திரசாலை—பூனாவிலுள்ள கடுதாசிசெய்யும் யந்திரசாலையை அரசாட்சியார் கையேற்றும் சுத்தவெண்மையான காயிதம் இன்னுஞ்செய்யப்படவில்லையாம். மூங்கிலிலிருந்தே காயிதஞ்செய்யப்படுவதால் லகுவில் கிழிந்துபோகக்கூடியதாயிருக்கிறதாம். வேறுபொருட்களில்வெண்மையான காயிதஞ்செய்ய தக்கநிபுணரைவரவழைப்பாரானால் காயிதப்பஞ்சந்தீராதா?

அடையாற்று அநாதசாலை—அடையாற்றிலுள்ள செயின்பத்திரிசியார் அநாதசாலைக்குத் தண்ணீருதவுதற்காக 2750 ரூபா கொடுக்க அரசாட்சியார்முன்வந்திருக்கிறார்கள்

புதையல்—மலையாளத்தில் காரிபோ என்றஇடத்தில் சிவப்புக் கறுப்புப் பச்சை நிறமான கற்களை ஒருவயலில்கண்டெடுத்தனர் பொலிசார் அதை மாணிக்கங்களென்று பரீட்சைக்காக சென்னைக்கு அனுப்பினர்

யுத்த தந்தி.

பிரான்சுபெல்சிய செர்மனியயுத்தம்.

5உ பிரித்தானியர் போசியேருக்குமேற்கில்நேற்றிரவுபிடித்த அகழரண்களில்இப்போது சத்துருக்களைமிகவும் நெருங்கியிருக்கிறார்கள். அவைகளைச்சுற்றி அனேகசெர்மனியர் மாண்டுகிடக்கிறார்கள். பிரித்தானியர் 100 செர்மனியரைச்சிறைபிடித்தார்கள். 4 பிரித்தானிய ஆகாயக்கப்பல்கள் 7 சத்துரு ஆகாயக்கப்பல்களுடன் முக்கால்மணிநேரம்போராடி 3 சத்துருக்கப்பல்கள் துரத்தப்பட்டன. பிரித்தானிய ஆகாயக்கப்பல்களில் இரண்டு திரும்பிவரவில்லை.

போசியேருக்குவடக்கில் பிரித்தானியருடைய அனுகூலமானஎதிர்ப்புகளில் அவுஸ்திரேலியபடைகளும் பங்குபற்றின. அப்போது பிரதானசெர்மனிய இரண்டாவது அரண்வரிசை பிடிபட்டது.

வெள்ளிக்கிழமை பிரித்தானியபோர்வீரர்களும் ஆஸ்திரேலியபோர்வீரர்களும் போசியேருக்கப்பால் விரைவாய் முன்னேறிப்போனார்கள். செர்மனியர் காத்திரப்பிரகாரம் தாக்கப்பட்டார்கள், செர்மனியருடைய இரண்டாம்வரிசைஅரண்தூசியாக்கப்பட்டது. பிரித்தானியர் ஒருமைல் விசாலத்துக்குமேல் முன்னேறினர். செர்மனியர் இரவில் மூன்றுமுறை எதிர்த்துவந்தும் பிரித்தானியர் கடுமையாய்க் குதிப்பா [illegible] கொண்டிருந்தபடியால் ஒருபிரயோசனமுமடையாமல் மிகுசேதத்துடன் திருப்பியடிக்கப்பட்டார்கள். அனேக செர்மனியர் தங்களைப் பிரித்தானியர் கையில் ஒப்புக்கொடுத்தார்கள். ஆயினும் குழிகளில் பதுங்கிக்கொண்டிருந்தவர்களைத் தேடிப்பிடித்தல் மிகு கஷ்டமாயிருந்தது. எற்கனவே 400 பேர் பிடிபட்டுக் கொண்டுவரப்பட்டனர்.

தியாமாண்டுப்பக்கத்தில் இரவுமுழுதும் சண்டை தொடர்ச்சியாய்நடந்துகொண்டிருந்தது. பிளெரியிலும் தியாமாண்டு யுத்தகட்டடத்துக்கு வடமேற்கிலும் தெற்கிலும் அதேபிரகாரம்சண்டை நடந்தது. பிரான்சரை அவர்கள் பிடித்த இடங்களிலிருந்து அப்புறப்படுத்தச் செர்மனியர் பிரயாசப்பட்டுங் கூடவில்லை; பிரான்சர் இரண்டாம்முறை எதிர்த்துப்போய் 12 மணிநேரத்துள் தியாமாண்ட் யுத்தகட்டடத்தைக் கைப்பற்றினார்கள். பிளெரியில் அகோரமான சண்டைநடந்தது. பிரான்சர் காலையில் அதைக்கைவிட்டார்கள். மத்தியானத்துக்குமேல் பிரான்சிய காலாட்படை எதிர்த்துப்போய் ஈட்டிகளால்குத்திச் செர்மனியரைத்துரத்தி அந்தவளவில் முக்கால்வாசியை மறுபடி கைப்பற்றினார்கள். செர்மனியர் இன்னும் மூர்க்கமாய் எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள். பிரான்சர் 400 செர்மனியரைச் சிறைபிடித்தனர்.

6உ பிரித்தானியபோர்முகத்தில் சனிக்கிழமை பிரித்தானியர்பிடித்த அரண்களைச்சேர்த்து இப்போது பிரித்தானியஅரண் பேசியருக்கு வடக்கிலும் மேற்கிலும் கடைசிஇரண்டுதினங்களில் 3000 யார் விசாலத்திற்கு 300 முதல் 600 வரையில் எட்டியிருக்கிறது.

பிரித்தானியர் ஹைக்காட்டில் இன்னும் சற்று முன்னேறிப்போனார்கள். இரவுமுழுதும் செர்மனியர் அங்கருக்கும் சோமுக்குமிடையில் பிரித்தானிய போர்முகத்தின்மேலும் அதற்குப்பின்னும் பலவிடங்களில் பீரங்கி சுட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஆருசக்குக்கிழக்கில் பிரித்தானிய காவற்படை புறப்பட்டுப்போனதால் செர்மனியர் அச்சங்கொண்டு அப்பக்கத்தின்மேல் மிகுதியாய்ப் பீரங்கி சுட்டார்கள்.

5உ தியாமாண்ட் யுத்தகட்டடத்தின்மேல் செர்மனியர் மறுபடியும் மூர்க்கமாயெதிர்த்துவந்து அனுகூலப்படாமல் திரும்பினார்கள். பிளெரியிலும் அந்தப்படியே அவர்களுடைய பிரயத்தனங்கள் விருதாவாயின. யாத்காட்டைச் செர்மனியர் பலத்த ஆயுதங்களுடன் தாக்கவந்து திருப்பியடிக்கப்பட்டார்கள். சோம்பக்கத்தில் 2 செர்மன் ஆகாயக்கப்பல்களும் வேர்டனில் 2 செர்மன் ஆகாயக்கப்பல்களுந் தரைக்குக் கொண்டுவரப்பட்டன.

6உ பிரான்சர் பிளெரியின் தென்பாகத்தையெல்லாம் தங்கள்கையில் வைத்திருக்கிறார்கள். செர்மனியர் நாள்முழுதும் பீரங்கிசுட்டுக்கொண்டிருந்து வோ-ஷப்பிதர் காட்டில் இரண்டுமுறை பலமாய்த்தாக்கினார்கள். முதல்முறை முற்றும் அபசெயமடைந்தார்கள். இரண்டாம்முறை பிரான்சு அகழரண்களில் சிலபாகங்களில் நுழைந்தார்கள். ஆயினும் பிரான்சர் அவர்களைத் திருப்பியடித்தார்கள். பிரான்சுப்போர்முனை அசைக்கப்படாமலிருக்கிறது.

தியாமாண்டுக்குவடமேற்கில் செர்மனியர் எதிர்த்துக்கொண்டுவந்தபோது பிரான்சர் அவர்களைத்திருப்பியடித்துச் சற்று முன்சென்றார்கள்.

பிரான்சிய ஆகாயக்கப்பல்கள் கோம்பின்பக்கத்திலும் நோயான் சியெனே செதான் கோன்பிளான்ஸ் மெட்ஸ் ஸ்டேசன்கள்மேலும் ரோம்பாக்கில் இராணுவகட்டடங்கள்மேலும் அனேக வெடிக்குண்டுகள்போட்டன. சோம்ஆற்றின்மேல் பறந்துகொண்டிருந்த இரண்டு செர்மனிய ஆகாயக்கூண்டுகள் நெருப்புக்கிரையாக்கப்பட்டன.

7உ வேர்டன்பக்கத்தில் ஒரு பிரான்சிய ஆகாயகமனி 2 செர்மன் ஆகாயக்கப்பல்களைத் தரைக்குக்கொண்டுவந்தான், வேறோர் ஆகாயக்கப்பல் எஸ்னேயில் தரைக்குக்கொண்டுவரப்பட்டு அதிலிருந்தசெர்மனியவிமானிகள்சிறைபிடிக்கப்பட்டார்கள். அதிலிருந்த புதுமாதிரியானமெசின் சேதமில்லாமல் பிரான்சரால் பிடிக்கப்பட்டது.

வேதாலன்பக்கத்தில் பலமானபீரங்கிச்சண்டை நடந்தது. தியாமாண்டில் யுத்தகட்டடத்தைத் தாக்கிக்கொண்டுவந்த செர்மனியர் பிரான்சுப்பீரங்கிகளின் அகோரத்தால்திருப்பியடிக்கப்பட்டார்கள்

வோ காட்டைச் செர்மனியர் தாக்கிக்கொண்டுவந்தபோது முற்றும் அபசெயப்பட்டுத்திரும்பினார்கள், 3 செர்மன் ஆகாயக்கப்பல்கள் சோம்பக்கக்கரையில் இறங்கவேண்டியதாயிற்று. வேறு 3 செர்மன் ஆகாயக்கப்பல்கள் தங்களுடைய நிரையிலேயே இறங்கின. மெட்ஸ் சப்லோன் தியோன்வில் புகைரத ஸ்டேசன்கள்மேலும் ரோம்பாக் ஆலைகள்மேலும் எத்தென் பாளையங்கள்மேலும் வெடிக்குண்டுகள் போடப்பட்டன.

செர்மனியர் நினையாதநேரத்தில் பிரித்தானியர் அவர்களைத்தாக்கிப் போசியேரைப்பிடித்தார்கள். அகழரண்களிலிருந்து செர்மன்போர்வீரர்கள் மாறிக்கொண்டுபோகிறநேரமாய் அப்போது இருந்தது. ஆகையால் செர்மனியர் திடீரெனத் தாக்கப்பட்டுச் சொல்லமுடியாத சேதமனுபவித்தார்கள். போசியேரை எவ்விதத்திலும் பிரித்தானியர்கையில் விழாதபடி காக்கவேண்டுமென்று அவர்களுக்குக் கண்டிப்பான கட்டளை கொடுக்கப்பட்டிருந்தது. ஆகையால் கணக்கற்றசெர்மனியர் அங்குமடிந்தார்கள்.

பிரித்தானியர் நேற்றுப்பிடித்தஇடங்களைக் காப்பாற்றிக்கொண்டார்கள், செர்மனிய ஆகாயக்கப்பல்கள் அங்கருக்கும் சோமுக்குமிடையில் வெடிக்குண்டுகள் போட்டுக்கொண்டிருந்தன.

போசியேருக்குக்கிழக்கில் செர்மனியர் எதிர்த்துக்கொண்டுவந்தபோது பிரித்தானியர் அவர்களைத் திருப்பியடித்தார்கள்.

நேற்றுச் சாயந்தரம் நெவில் சென்ற் வாஸ்துக்குக்கிழக்கில செர்மன் அகழரண்களைப் பிரித்தானியர் சேதப்படுத்தினார்கள். செர்மனியர் புவா கிரெனியேருக்குத்தென்கிழக்கில் பிரித்தானிய அகழரண்களைச் சேதப்படுத்தப்பிரயாசப்பட்டுக்கூடாமற்போயிற்று.

8உ போசியேருக்கு வடக்கிலும் வடகிழக்கிலும் செர்மனியர் பலமாய்ப் பீரங்கி சுட்டுக்கொண்டிருந்து பிரித்தானிய புதுவரிசைகளைக் காலை நாலு மணிக்குத்தாக்கி அகழரண்களில் [illegible] நுழைந்தார்கள். ஆயினும் கனத்தசேதத்துடன் உடனே திருப்பியடிக்கப்பட்டார்கள். மறுபடி 9 மணிக்கு இரண்டுமுறை தாக்கிக்கொண்டுவந்தார்கள். அப்போதும் அபசெயப்பட்டுத்திரும்பினார்கள். கடைசியாய்ச் சாயந்தரம் 4 மணிக்கு இலேசாய்த் தாக்கினார்கள். அனேகர் சிறைபிடிக்கப்பட்டார்கள்.

கில்மோண்டில் பலமானசண்டைநடந்தது. கில்மோண்டுக்குத் தென்மேற்கில் பிரித்தானிய வரிசை இப்போது 400 யார்முன்சென்றிருக்கிறது. போசியேரில் அகழரண்களில் 50 யார் இன்னும் செர்மனியர்கையிலிருக்கிறது. இத்தச்சண்டையில் செர்மனியர் அக்கினிச்சுவாலைகக்கும்கருவிகளை உபயோகித்தார்கள். வோங்வால் ஓய்காடு போசியேர் மாமெட்ஸ முதலிய இடங்கள்மேல் செர்மனியர் கடுமையான பீரங்கிப் பிரயோகஞ் செய்தார்கள்.

8உ பிரான்சுப்போர்முகத்தில் ஹெம்காட்டுக்குச்சமீபத்தில் பிரான்சர் ஒருவரிசை செர்மன்அகழரண்களைப்பிடித்து 120 செர்மனியரையும் 12 மெசின்பீரங்கிகளையுங் கைப்பற்றினார்கள்.

தியாமாண்டுக்குத்தெற்கில் பிரான்சர் சற்றுமுன்சென்று சிலமெசின்பீரங்கிகளைக்கைப்பற்றினார்கள். செர்மன் அகழரண்களில் அனேக செர்மன்பிணங்கள் கிடந்தன.

செர்மனியர் பிளெரிதுவங்கித் தியாமாண்டுக்கட்டடம்வரையில் தாக்கிப் பெருத்தசேதத்துடன் பின்னிடைந்தார்கள், ஆயினும் கடுமையானசண்டையிட்டுத் தியாமாண்டுகட்டடத்தில் சிறிதுதூரம் நுழைந்தார்கள். பிரித்தானியர் கில்மோண்டைத்தாக்கிக்கொண்டிருக்கையில் பிரான்சர் அவர்களுக்கு வலதுகையில் 139ம் கம்பர்க்குன்றுக்குக் கிழக்கிலும் ஹார்தகூருக்கு வடக்கிலும் முன்சென்றார்கள்.

மோர்ருக்குப் தோட்டவீட்டுக்குக்கிழக்கில் பிரான்சர் நேற்றுப்பிடித்த அகழரண்களை செர்மனியர் தாக்கவந்தும் கனத்தசேதத்துடன் திருப்பியடிக்கப்பட்டார்கள்.

9உ மேஸ்ஆற்றின் வலதுகரையில் தியாமாண்ட் பிளெரி போர்முனையெங்குஞ் சண்டை அகோரமாயிருந்தது. பிரான்சர் ஆச்சரியமான வீரியத்துடன் தாங்கள் பிடித்திருந்தஇடங்களைப் பாதுகாத்துக்கொண்டார்கள், செர்மனியர் தியாமாண்டுக்கு வடமேற்கிலும் தெற்கிலுமுள்ள இடங்களைப் பழையபடி கைப்பற்ற மிகவும் பிரயாசப்பட்டார்கள். பிறகு பிரான்சர் எதிர்த்துப்போய்ச் செர்மனியர்காவல்வைத்த அகழரணின் பாகங்களையெல்லாம் பழையபடிபிடித்துக்கொண்டு தியாமாண்டு யுத்தகட்டடத்தில் மறுபடியும் பிரவேசித்தார்கள்.

சோமுக்குவடக்கில் பிரான்சர் பலப்படுத்தப்பட்ட ஒருகாட்டையும் ஹெம்காட்டுக்குவடக்கில் ஒரு அகழரணையும் பிடித்துக்கொண்டார்கள். மொத்தத்தில் இரண்டுநாட் சண்டையில் பிரான்சர் 300 முதல் 500 யார் விசாலமான அகழரண்களைப் பிடித்தார்கள்.

செர்மனியர் பலமுறை அபசெயப்பட்டுப் பிறகு தியாமாண்டில் சற்று அமைந்தார்கள். பிளெரியிலே செர்மனியர் வெடிக்குண்டுகளைப் போட்டுக்கொண்டு முன்சென்ற பிரான்சரைத் தடுக்கமுடியவில்லை. வோ காட்டைச் செர்மனியர் தாக்கிப் பின்னிடைந்தார்கள். பிரான்சிய ஆகாயக்கப்பல்கள் பல ரெயில் ஸ்டேசன்கள்மேல் வெடிக்குண்டுகள்போட்டன.

போசியேருக்கு வடமேற்கில் அவுஸ்திரேலியபடைவீரர் முன்சென்றார்கள். ஆகாயக்கப்பல்களுடைய உதவியால் அனேக செர்மன்பீரங்கிகளும் தளபாடச்சாலைகளும் நாசமாயின. ஒரு புகைவண்டித்தொடர் ஆகாயக்கப்பல்கள்போட்டகுண்டுகளால் தீப்பற்றிக்கொண்டது. செர்மனிய ஆகாயக்கப்பல்கள் மிகு சுறுசுறுப்பாயிருந்தன. ஆயினும் சண்டைசெய்யாமல் விலகின.

அருசுக்குத்தெற்கில் பிரித்தானியர் ஒருசெர்மன்அரணைத் திடீரெனத்தாக்கிச் சேதப்படுத்தினார்கள். ஹுல்லட்சுக்குவடமேற்கில் செர்மனியர் பிரித்தானிய அகழரண்களைத் திடீரெனத் தாக்கமுயன்றும் பிரயோசனப்படவில்லை.

10உ போசியர்சுக்குவடமேற்கே ஆஸ்திரேலியர் 600 யார் தூரமான போர்முனையில் 200 யார்வரை தம்படைவரிசையை முன்னுக்குத்தள்ளினர். ஆகாயவிமானங்களும் பீரங்கிகளுஞ் சேர்ந்து வேலைசெய்ததால் அனேக சத்துருப் பீரங்கிகள் சேதமாயின, வெடிமருந்துச்சாலைகள் வெடிக்கச் செய்யப்பட்டன. ஒரு ரெயில்வண்டிக்குத் தீவைக்கப்பட்டது. சத்துரு ஆகாயப்படை சுறுசுறுப்பாய் வேலைசெய்தன. பல நமது விமானங்களாலும் துப்பாக்கிகளாலுஞ் சேதமாக்கப்பட்டன. நாம் பெர்சியக்குவடக்கே இன்னும் முன்சென்று நாம் உத்தேசித்தஇடங்களை வசப்படுத்திப் பலப்படுத்திக்கொண்டோம் என்று பிரித்தானியசெய்தி கூறுகிறது.

வேர்டன்பக்கத்தில் ஹேம்காட்டில் நாம் முன்சென்றோம், சோம்நதிக்கரையில் செர்மனியரின் மூன்றுவிமானங்கள் கீழேவீழ்த்தப்பட்டன. சோம்நதிக்கரையிலும் வேர்டனுக்கெதிரிலுமிருக்கும் புகைரத ஸ்டேசன்கள்மேலும் ஒருபீரங்கிப்படை ஸ்தலமேலும் ராணுவஸ்தலங்கள்மேலும் பிரான்சிய ஆகாயப்படை 400 குண்டுகளை எறிந்தது. இன்னொரு ரூசியபடைவகுப்பு பிரெஸ்டு என்னுமிடத்தில்வந்து இறங்கியிருக்கிறது.

மாட்டின்பூச்சென்னுமிடத்துக்குத்தெற்கே முன்சென்ற சத்துருக்களை நாம் பீரங்கிப்பிரயோகத்தால் பின்தள்ளிவிட்டோம். நமதுவிமானங்கள் சத்துரு இராணுவஸ்தலங்கள்மேல் குண்டுகளை எறிந்தன. நேற்றுநடந்த ஆகாயச்சண்டையில் பல சத்துருவிமானங்கள் அவர்கள் அரண்வரிசையில் கீழேவீழ்த்தப்பட்டன. நமது மூன்றுவிமானங்கள் திரும்பிவரவில்லை.

11உ ரீசும்க்குத்தெற்கேயிருந்த சத்துரு அரண்வரிசையில் ஒரு பாழடைந்தபுலத்தை நாம்தாக்கிப் பலனடைந்தோம் என்று பிரித்தானியசெய்தி கூறுகிறது.

12உ சோம்நதிக்குவடக்கே பல செர்மனிய அரண்கள் தகர்க்கப்பட்டன. ஒரு அரணானஇடமும் இருசிறியகாடுகளும் பிரான்சரால்பிடிக்கப்பட்டன. பிரான்சர் மாரிபாஸிலிருந்து ஹேம்காட்டுக்குப் போகும் பாதையோரமாகப் புதியவரிசைகளை ஸ்தாபித்திருக்கிறார்கள் [illegible] பீரங்கிகளால் தகர்க்கப்படுகின்றன. ஒரு செர்மனியவிமானம் டொஉமாண்டுக்குத்தெற்கே கீழேவீழ்த்தப்பட்டது.

பெர்சியாசுக்குவடக்கே நாம் சத்துருக்களிடமிருந்து பலாத்காரமாய்ப்பிடித்த அரண்களைப்பிடிக்கச் சத்துருக்கள் பலமானகாலாட்படையையும் பெரிய பீரங்கிகளையுங்கொண்டு நேற்று நம்மைத்தாக்கியும் மிகுசேதத்துடன் பின்தள்ளப்பட்டார்கள். சத்துருக்கள் ஓரிடத்திலாவதுவந்து நமது ஸ்தலங்களைப் பிளக்கமுடியவில்லை.

13உ சோம்நதிக்குவடக்கே சாடிகோட்டுக்குக் கிழக்கேயிருந்து சோம்நதிக்கரை வரையிலுள்ள செர்மனிய ஸ்தலங்களில் மூன்றும் ஸ்தலத்தைத் தாக்கி எல்லாஅரண்களையும் முன்பின் 4 மைல் நீளமும் 656 யார்முதல் 1092 யார்வரை அகலமுமுள்ள போர்முனையிலுள்ள அரண்களையும்பிடித்தோம். 1000 பேர் சிறைபிடிக்கப்பட்டார்கள். 30 மெஷின்பீரங்கிகளும் பிடிக்கப்பட்டன. பாக்சின் தென்பாகத்தையும் பிடித்தோம் என்று பிரான்சியசெய்தி கூறுகிறது.

பிரித்தானியர் மார்டின்பூச்சில் 400 யார்தூரம் வரை முன்சென்றனர். பெசென்டின் லிபெடிட் என்னுமிடத்துக்கு வடமேற்கேயிருக்கும் பீடபூமியிலிருக்கும் சத்துருஅரண்களைப் பிடித்தனர்.

14உ ஒரு சத்துருவிமானம் கீழேவீழ்த்தப்பட்டது. ஒருபிரித்தானியவிமானங்காணப்படவில்லை.

13உ பிரான்சு ஆகாயப்படை மெட்சுக்கோட்டைக்கருகிலுள்ள செப்பின்சான் ஸ்டேசன் புகைரதத்தொழிற்சாலை ராணுவஸ்தலங்கள் ஆகியவைகள்மேல் 120 பெரியகுண்டுகளைப் போட்டது.

14உ பேர்சியசுக்குமேற்கே நாம் நேற்றுப்பிடித்தஅரண்களில் ஒருபாகத்தைச் சிறிதுகாலம்வரை சத்துருக்கள் வசப்படுத்திக்கொண்டார்கள். சத்துரு விமானக்கொட்டகைகளை நமதுவிமானங்கள் தாக்கின. ஒருவிமானம் காணப்படவில்லை என்று பிரித்தானியசெய்தி கூறுகிறது.

எஸ்டிரீசுக்குத் தென்மேற்கேயுள்ள அரண்களில் சிலபாகங்களை நாம்பிடித்தோம் செர்மன் விமானங்கள் ரீம்ஸ் என்னுமிடத்தின்மேல் தீவைக்கும் குண்டுகளையும் வேறுகுண்டுகளையும் எறிந்தன. செயின்ற் ரிமி ஆலயத்துக்கடுத்த ஆஸ்பத்திரியும் வேறோர் அவுஷதசாலையும் சேதமாயின. 6 பேர் கொல்லப்பட்டனர் என்று பிரான்சியசெய்திகூறுகிறது.

15உ செர்மனியரின் மூன்றும் ஸ்தலங்களில் பிரான்சர் உத்தேசித்திருந்த இடங்களெல்லாவற்றையும் 80 நிமிஷநேரத்தில் பிடித்துக்கொண்டனர். கொடியயுத்தஞ்செய்து 4 அரண்வரிசையைக் கடந்துசென்றும் சொற்பசேதந்தான் உண்டாயிற்று.

பெர்சியசுக்குவடமேற்கே 13உ சத்துக்கள் வசப்படுத்தியஇடமுழுதும் திரும்பப்பிடிக்கப்பட்டன

14உ சோம்நதிக்கரையில்பிரான்சியபடை 327 யார் நீளமும் 109 யார் அகலமுமான போர்முனையில் செர்மனியஅரண்களில் சிலபாகத்தைப் பிடித்துக்கொண்டது.

15உ ஹைகாட்டுக்கும் வில்லிகாட்டுக்கும் மத்தியில் மாத்திரந்தான் சத்துருக்கள் பிரித்தானியரிலும் உயர்ந்தஸ்தலத்திலிருக்கிறார்கள்.

17உ சோம்நதிக்குவடக்கே பிரான்சர் பிரித்தானியருடன்கலந்து வேலைசெய்து ஒருமைல் தூரமான போர்முனையில் செர்மனிய அரண்வரிசை முழுவதையும் பிடித்துக்கொண்டார்கள். அச்சமயத்தில் தெற்கே பிரான்சர் கூட்டமாய்த்தாக்கி 1310 யார்தூரமுள்ளபோர்முனையில் பலமாயரண்படுத்தப்பட்ட செர்மனியஅரண்வரிசையைப் பிடித்துக்கொண்டார்கள். மாரிபாசுக்குவடக்கே ஒருமைல்தூரம்வரை அரண்களைப்பிடித்தபின் இருபகுதியாரும் மாரிபாசுக்குப்போகும் ரோட்டின்சமீபத்தில் வந்துசேர்ந்தார்கள். தெற்கே உக்கிரயுத்தஞ்செய்து கிளேரிக்குப்போகும் ரோட்டுக்குக்கிழக்கே ஒன்றேகால்மைல் நீளமும் 327 யார் முதல் 545 யார்வரையிலுமுள்ள போர்முனையிலிருந்த செர்மனிய ஸ்தலங்களெல்லாம் பிடிக்கப்பட்டன. சத்துருக்களுக்கு அதிகசேதம். சோம்நதிக்குத்தெற்கே பிடிக்கப்பட்ட 60 பேர்தவிர இன்னுமனேகர் சிறைபிடிக்கப்பட்டனர்.

18உ நமதுபடைவரிசை குயில்லிமாண்டுக்குக் கிழக்கிலும் தென்கிழக்கிலும் முன்சென்றது. ஹைகாட்டுக்குமேற்கே நம்படைவரிசை முன்னிருந்ததற்கு 300 யார் தூரத்தில் 800 யார்தூரமான அரணைப்பிடித்தோம். பேசண்டினுக்கு வடமேற்கே நாம் சத்துருஅரணில் 100 யார்தூரம்வரை பிடித்துக்கொண்டோம். அவ்விடத்தில்சத்துருக்கள் பிடிவாதமாய் நம்மைத் திருப்பிஎதிர்த்து நேற்றிரவும் இன்றுகாலையிலும் தாக்கிக்கொண்டிருந்தனர். செர்மனிய ஆறு காலாட்படைவரிசை முன்சென்றும் பின்னிடச்செய்தோம். மாட்டின்பூச்சில் அவர்கள் திருப்பிஎதிர்த்தும் பின்தள்ளிச் சிலரைச் சிறைபிடித்தோம். நமதரண்வரிசைக்குப்பின்னால் ஒரு செர்மன்விமானம் கீழேவீழ்த்தப்பட்டது என்று பிரித்தானியசெய்தி கூறுகிறது.

சோம் போர்முனையில் பிரான்சிய பீரங்கிகள் சுறுசுறுப்பாய் வேலைசெய்தது. அதற்கு வடக்கே நேற்று 200க்கு மேற்பட்ட காயப்படாதவர்களைச் சிறைபிடித்தோம். 5 மெசின்பீரங்கிகளும் பிடிக்கப்பட்டன என்றுபிரான்சியசெய்திகூறுகிறது.

ரூசிய செர்மனிய ஆஸ்திரியயுத்தம்.

5உ கீழ்த்திசையில் புரோடிக்குத்தெற்கில் பிடிவாதமான சண்டைநடந்தது. செர்மனியர் பலமுறைஎதிர்த்தும் பிரயோசனப்படவில்லை.

6உ புரோடிக்குத்தெற்கில் கிராபேர்க்கா செரேத் ஆறுகளில் நடந்துகொண்டிருக்கும் சண்டை ரூசியருக்கு அநுகூலமாயிருக்கிறது. அப்பக்கங்களில் ரூசியர் திடீரெனத்தாக்கி இரண்டு கிற்றார்களையும் அவைகளையடுத்த ஒருகாட்டையும் குன்றையும் பிடித்துக்கொண்டார்கள், ஒருகிற்றாரில் செர்மனியரை ரூசியர் ஒவ்வொருவீட்டிலிருந்து துரத்தவேண்டியிருந்தது. செர்மனியர் ஒன்பது முறைஎதிர்த்துவந்து பெருத்தசேதத்துடன் திரும்பினார்கள். ஆஸ்திரிய செர்மனியரில் 12000 பேர் சிறைபிடிக்கப்பட்டார்கள்.

7உ ரூசியர் புரோடியிலடைந்தவெற்றியால் டர்னோபோல் லெம்பெர்க் புகைரதப்பாதைக்கு இப்போது 14 மைல்தூரத்திலிருக்கிறார்கள் இதனால் ஆஸ்திரியர் டர்னோபோலிலிருந்து சலோட்சோபக்கம் பின்னிடைந்துபோகிறார்கள். 3 செர்மனிய இராணுவப்பிரிவுகள் ஜேவோட்சோப்புக்கும் அதற்குத்தெற்கிலுள்ள பொச்மார்சனிக்கும் ஆஸ்திரியருக்கு உதவியாக அனுப்பப்பட்டிருக்கின்றன.

கார்ப்பேதியன் மலைகளுக்குவடக்கில் சத்துருக்கள் சுறுசுறுப்பாயிருப்பது வெற்றியடைந்து முன்னேறிப்போகவேண்டுமென்ற கருத்துடனல்லவென்றும் ரூமேனியாவை ஐக்கியநேசியாருடன் சேர்ந்துகொள்ளவிடாமல் தடுக்கவேண்டுமென்பதற்காகவென்றும் உத்தேசிக்கப்படுகிறது.

ரூசியர் பிரித்தானியருடைய ஆகாயதான வல்லமையைக்கண்டதிசயித்துத் தாங்களும் தங்கள் ஆகாயப்படைகளைச் சீர்ப்படுத்தவேண்டுமென்று எத்தனங்கள்செய்யத் துவக்கியிருக்கிறார்கள்.

8உ ஸ்டாக்சாட் பக்கத்தில் ரூசியர் மிகவேகத்துடன்தாக்கி ஆஸ்திரியரையும் செர்மனியரையுந்துரத்தி 2000 பேரைச் சிறைபிடித்தார்கள். இன்னும் கடுமையானசண்டை நடந்துகொண்டிருக்கிறது. காயப்பட்ட அனேக ஆஸ்திரியரும் செர்மனியரும் ரூசியபாளையங்களுக்குக் கொண்டுவரப்படுகிறார்கள்.

நீஸ்தர் ஆற்றுக்குத்தெற்கில் சத்துருக்கள்தோற்று அலங்கோலமாய் ஓடினார்கள். அனேகபீரங்கிகள் ரூசியர்வசப்பட்டன. அனேகர் சிறைபிடிக்கப்பட்டார்கள்.

ஒரு ரூசியபடைத்தலைவன் தமக்குப்பணிந்தவர்களை வசப்படுத்தும்படி நெருங்கியபோது ஒரு ஆஸ்திரியபடைவகுப்புத்தாக்கி அவனைச்சுட்டுவிட்டது. பின்பு அப்படைவகுப்பைச்சேர்ந்தவர்களெல்லோரும் கொலைசெய்யப்பட்டார்கள்.

கிஸ்னிபாப்சகரையும் ஆறுகிராமங்களையும் ரூசியர் பிடித்தனர். சத்துருக்கள் வெடிமருந்துச்சாலைகளையும் பாலங்களையும் வெடிக்கச்செய்தார்கள். ரூசியர் இப்பகுதியில் 110 சதுரமைல் விஸ்தாரமானஇடத்தைப் பிடித்திருக்கிறார்கள்,

செனரல் பாத்மேரின் சேனையில் ஆஸ்திரியருக்குப்பதிலாய்ச் செர்மனிய உத்தியோகஸ்தரை செனரல் கின்டன்பேர்க் நியமித்திருக்கிறார்.

செனரல் சகராப் புரோடிக்குத்தெற்கே செரேத்நதியைக் கடந்துசென்றார். அவர் ஸ்னோசோவுக்கும் டார்னோபோலுக்கும் மத்தியிலுள்ள ரெயில்பாதையைப் பயமுறுத்திக்கொண்டிருக்கிறார், கார்ப்பேதியன்பக்கத்திருந்ததாம்சிறிதுபின்னிட்டுச்சென்றதாக ரூசியஅறிக்கை ஒப்புக்கொள்ளுகிறது.

9உ ஸ்டானிஸ்லாவுக்குக் கிழக்கே நாலுமைல்தூரத்திருக்கும் டிஸமியேனிக்காகரை செனரல் லெசிட்ஸகி என்னும் ரூசியசேனாபதி வசப்படுத்திக்கொண்டார். அவர் 3500 செர்மனியருட்பட 7400 பேரைச் சிறைபிடித்தார். 63 மெசின் பீரங்கிகளையும்பிடித்தார். இது ஸ்டானிஸ்லாகநகரின் திறவுகோலாயிருக்கிறது. தற்போது நீஸ்தர் நதி பெருகுங்காலமாதலால் ஒரேதீர்மானமாய் முன்னேறுவாரென்று சத்துருக்கள் நினைக்க இடமில்லை. செனரல் லெசிட்ஸகி புரோடியிலிருந்து ஜெனரல்சகராப் முன்னேறுங்கிலருடன்சேர்ந்து ஜெனரல்பாத்மேரின் சேனைக்குத்திகிலையுண்டாக்கிக் கொண்டிருக்கிறார் ஆதலால் ஜெனரல்

பாத்மேர் மேற்குத்திசையைநோக்கிப் பின்னடைந்துசெல்லநேரிடுமென்று தோன்றுகிறது

10வ ருஷியர் கிரிப்லேனஎன்னும் பெரிய நெயில் சந்திப்புஸ்டேசனைப் பிடித்துக்கொண்டார்கள் சத்துருக்கள் மிகு குழப்பத்துடன் பின்செல்லுகிறார்கள்

11வ கொஞ்சநேரச் சண்டையின்பின் ருஷியர் ஸ்டானிஸ்லா நகரைப்பிடித்து மேற்குநோக்கிச் செல்லும் சத்துருக்களைப் பின்தொடருகிறார்கள் சொத்நிவின்வலப்பக்கத்தில் முன்னேறுகிறார்கள் அப்பகுதியில் ஆவணி௴ 4வ முதல இதுவரையில் 14000 பேருக்குமேல் சிறைபிடிக்கப் பட்டார்கள் ஸ்டானிஸ்லாநகருக்கு 20 மைல் தென்மேற்கிலுள்ள நட்வோனுபட்டினத்தையும் ருஷியர் வசப்படுத்தினர்

12வ உக்கிரசண்டைசெய்து மௌனூஸநர் சிலகாநகரையும் வசப்படுத்திக் கொண்டார்கள் பின்பு லைசலோடாலீபா நதியைக்கடந்துசென்றார்கள் 23000 ஆஸதிரிய செர்மனியர் சிறைபிடிக்கப்பட்டனர் கொல்லப்பட்டவரும் அதிகம் அங்குள்ள பாலங்களை ஆஸதிரிய செர்மனியர் சேதமாக்கிவிட்டார்கள் ஆனால் கடுஞ்சண்டைசெய்து நதிகளைக்கடக்கக்கூடிய பாலங்களைவசப்படுத்தி பெரியசேனையுடன் காடுகளையும் காடுகளையும்பிளந்து முன்சென்றார்கள் சத்துருக்கள் திருப்பி எதிர்த்தபோதெல்லாம் ருஷிய குதிரைப்படை தடுத்துப் பின்னிடச்செய்துவிட்டது

13வ சேனாதல் ஸ்காரப் ஏழுவாரமாக ஜெனரல் பிரஸ்செல்லாப்பின் உத்தரவுப்படிகடந்து இன்று ஆறுனுள்ள ஆறுகிராமங்களையும், தாடுகளையும், ஸடிரிபாநதிக்கரையிலுள்ள எல்லா அரண்களையும், டார்னபோலுக்கும் பக்சாசுக்கும் மத்தியிலுள்ள மாரிகால ஏற்பாடுஸ்தலத்தையும் பிடித்துக்கொண்டார்

14வ ஆவணி௴ முதற்தேதியிலிருந்து ருஷியர் 48000 பேரைச சிறைபிடித்தனர் 68 பீரங்கிகளையும் 335 மெசின் பீரங்கிகளையும் வேறு பீரங்கிகளையும் பிடித்தனர் மொத்தம் 84000 பேர் சிறைபிடிக்கப்பட்டவரும் 5500 பேர்ஜெனரல்டிசர் பாட்சேப் என்பவரால் பிடிக்கப்பட்டவர்கள், பொடேய்டரி மொரியாம்போல் என்னும் நகரங்கள்பிடிக்கப்பட்டன சத்துருக்கள் நதிக்கப்பாற் பின்னிடும்போது 1012 பேர் சிறைபிடிக்கப்பட்டார்கள் செர்மனிய மூன்று கடல்விமானங்கள் கான்ஸடான்சர்நகர்மீதும் அடுத்த கடற்கரைமீதும் பறந்து அவ்விட நடப்படிகளைப் பார்த்துச்சென்றன

15வ பெல்சிய சைக்கிள்படை மோட்டர்பீரங்கிகளைப் பிரயோகித்து ஸ்டிரிபாநதிக்கரையிலுள்ள ஸபோராப்படினத்தைப்பிடித்துக்கொண்டது

ருஷியர் கார்ப்பேதியன் காடுகளில் சப்னோனிட்சா கணவாயையும் அதற்குத் தெற்கிலிருக்கும் படினக்களையும் வசப்படுத்தி 1038 பேரைச் சிறைபிடித்தனர்

16வ ஆனி௴ 4வ முதல் 12வ வரையில் ஜெனரல் பிரஸலாப் 7757 உத்தியோகஸ்தரையும் 3, 50, 845 மனிதரையும் 405 பீரங்கிகளையும் 1326 மெஷின்பீரங்கிகளையும் திரளான யுத்தசாமான்களையும் பிடித்துக்கொண்டார்

ருஷியர் முன்செல்வதை ஜெனரல் பாத்மேர் பிகுதணிவுடன் தடுக்கிறார் அவர் ருஷியரைப் பிரிசெசானிக்குத் தெற்கிலுள்ள ஸலோடாலீபா நதிக்குமேற்கே தடுத்துத்தள்ளிவிட்டார் ஆனால் ருஷியர் அக்கதிரவதமமாகுமிடத்திற்கும் நீலநர்நதி சங்கமமாகுமிடத்திற்கும் மத்தியில் முன்னேறுகிறார்கள் அவர்கள் பிஸ்ட்ரிட்சா நதிக்கரையிலுள்ள சொலோட்வைனு என்னும் சிறியநகரை வசப்படுத்தினர் அதற்கு மேற்கேயுள்ள கிராமத்தையும் பிடித்தனர் ருஷ்யபலத்தைச் சகிக்கமுடியாமல் டிவேடின், வோரோசடாப் பிரதேசங்களிலிருந்து செர்மனியர் பின்வாங்குகிறார்கள்

17வ மேலும் 198 உத்தியோகஸ்தரும் 7308 மனிதரும் 29 பெரியபீரங்கிகளும் 17 கனத்தபீரங்கிகளும் 70 மெசின்பீரங்கிகளும் 14000 குண்டுகளும் பிடித்துக்கொள்ளப்பட்டதென்று ருஷிய அறிக்கை கூறுகிறது

இத்தாலிய ஆஸ்திரிய யுத்தம்.

6வ தென்திசையில் ஆஸதிரியர் அடிக்கடி மேல் இசோனசோவுக்குமிடையில் தாக்கினார்கள் மேலும் சுகாறு கோர்தெவோல் பள்ளத்தாக்குகளிலும் தாக்கிக்கொண்டு வந்தார்கள் இத்தாலியர் எல்லாஇடங்களிலும் அவர்களைத் துரத்தியடித்தார்கள் இருசாரிலும் பீரங்கிப்படை மிகுந்த சுறுசுறுப்பாய் வேலைசெய்தது ஆஸ்திரியர் இப்போது ஓர்புதுமாதிரியான வெடிக்குண்டு உபயோகிக்கிறார்கள்

7வ அடிஸ்மேலிசோன்சோ இவைகளுக்கு இடையில்பீரங்கிச்சண்டை கடுமையாயிருந்தது மோன்பால் கோன்பக்கத்தில் இத்தாலியர் மூன்றுபீரங்கிகளையும் அநேக டசின் மெசின்பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் குண்டுமருந்தையும் கைப்பற்றினார்கள் 3,600 ஆஸதிரியரைச்சிறை பிடித்தார்கள் அவர்களில் 100 பேர் உத்தியோகஸ்தர்கள் பெர்ஸாகிலியெரி போர்வீரர்கள் பயங்கரமானகைச்சண்டையிட்டு ஒருகுன்றைப்பிடித்துத் தாக்கிக்கொண்டுவந்த ஆஸ்திரியரைத் தோற்கடித்தார்கள் 8வ கொரிசியாவின் முன்னணியின்முக்கியபாகம இப்போது இத்தாலியர் கையிலிருக்கின்றது இத்தாலியஆகாயக்கப்பலொன்று ஒப்சீனு புகைரதஸ்டேசன்மேல் ஒருதொன்வெடிக்குண்டுகள்போட்டது

ஞாயிற்றுக்கிழமையும் திங்கட்கிழமையும் இத்தாலியர்பிடித்தது 8,000 போர்வீரர் 11 பீரங்கிகள் 100 மெசின்பீரங்கிகளென இதுவரையில் அகப்பட்டிருக்கும் கணக்கால் தெரியவருகிறது. 9வ இத்தாலியர் கொரிசியாவில் நுழைந்த சங்கதி இத்தாலியில்அளவில்லாத சந்தோஷத்தையுண்டாக்கினது இதுவரையில் 10,000 ஆஸதிரியர்சிறை பிடிக்கப்பட்டிருக்கிறார்கள் ஏராளமான யுத்தசாமான்களைக் கைவிட்டுவிட்டு ஆஸதிரியர் ஓட்டம்பிடித்தார்கள் இத்தாலிய குதிரைப்படைகளும் பெர்ஸாகிலியெரி படைகளும் ஆஸ்திரியரை இசோன்சோவுக்கு அப்பால் துரத்திக் கொண்டுபோயின

10வ டொல்மினோவுக்குத்தெற்கிலிருந்து கடல்வரையில் ஆஸதிரியரின் இசோன்சோயுத்தக்கரை முழுவதும் இப்போதுஇத்தாலியர்வசமிருக்கிறது

9வ இத்தாலியர்சிலவாரங்களாய் ஆயத்தஞ்செய்துகொண்டு ஒரேதடவையில் ஸபோடினு பாடகிரா பொன்பிசிலி ஆல்லோபியா ஆகியஇடங்களை வசப்படுத்திக் கொண்டனர் ஆஸதிரியர் 2000 அடிஉயரமுள்ள ஸபோடினு மலைச்சிகரத்தில் இரண்டு தாக்கப்பட்டார்கள் அம்மலையின் தென்பக்கச்சாரல்களில் இத்தாலியர் பலமாகங்களாக் குகைகளைக்குடைந்து ஒவ்வொன்றிலும் காலாட்படைகளை வைத்திருந்தார்கள் அவர்கள் 850 அடிநீளம்வரையில் மலையைக்குடைந்து இரகசியமாய்வழியுண்டாக்கி ஆஸ்திரிய அரண்களிருந்து 90 அடிதூரத்தில்சேருக்கிவந்து அவ்விடத்திலிருந்து 800 பேர் குகைகளிலிருந்து வெளிப்பட்டுவந்தவர்களின் சகாயத்தையும்பெற்றுச் சத்துருக்களைத்தாக்கினர். 20 நிமிஷத்தில் இத்தாலியர் புகையில் மறைந்துசென்று மூன்று அரண் நிரைகளைப் பிடித்துக்கொண்டு ஒரு மணிநேரத்தில் சத்துரு அரணிடத்தையும்பிடித்து அனேகரைச்சிறைப்படுத்தி மலைச்சாரல்களால் இறங்கிப் படகுகளில் கொண்டுபோனார்கள். இத்தாலியர் கொரிசியாப் பட்டினத்தில் நுழைந்து பதினாயிரம்பேரைச் சிறைபிடித்துக் கொண்டார்கள். ஆஸதிரியர் திரளான சாமான்களைவிட்டுப்போனார்கள். இத்தாலிய குதிரைப்படையும் சைக்கிள் படையும் சத்துருக்களை இசான்சோநதிக்கப்பாலும் பின்தொடர்ந்தன.

10வ கொரிசியாவைப்பிடித்த இத்தாலியர்க்கு மிகு சந்தோஷமுண்டாயிற்று. இசான்சோ அணைவரிசைமுற்றும் இத்தாலியர் வசப்பட்டது.

கொரிசியாவில் இதுவரையில் பன்னீராயிரம் பேருக்குமேலே சிறை பிடிக்கப்பட்டனர். கார்சோபீட்பூமியில் பாஸ்சினிஎன்னுமிடத்தை இத்தாலியர் வசப்படுத்தினர். இத்தாலியர் பிடித்தஇடம் பன்னிரண்டரை மைல்நீளமும் 3 மைல் அகலமுமான நு.ரெண்டிஞேவில் ஆஸ்திரியர் படையெடுத்துவந்ததினால் இத்தாலியர் பலம்குய்ந்ததென்று ஆஸதிரியர் நம்பியிருந்தார்கள். ஆனால் இத்தாலியர் இரகசிய ஏற்பாடெல்லாஞ்செய்துவைத்துக் கொரிசியாவை வசப்படுத்தினர்.

11வ வெனிஸ்நகர்மேல் சத்துருஆகாயப்படை குண்டெறிந்ததால் இருவர் கொல்லப்பட்டார்கள். பொருள்கள் சொற்பசேதம், தெயில்பாதைக்கும் ராணுவஸதாபனங்களுக்கும் சொற்பசேதமாயினும் சந்தமேரியாகோயில் முற்றுஞ் சேதமாய் விட்டது.

12வ பியும்என்னுமிடத்தில் ஆகாயப்படை மண்ணெய்த்தொட்டிகளையும் டொர்பிடோவெடிக்குண்டுச்சாலைக்கருகிலுள்ள கட்டிடங்களையும் விலையுயர்ந்த மெசின்களடங்கிய மூன்று கொட்டகைகளையும் சேதமாக்கிவிட்டதாம்.

ஒப்பாச்சியேசல்க கரைவசப்படுத்தி 270 பேரைச்சிறைபிடித்து மூன்று பெரியபீரங்கிகளையும் இத்தாலியர் பிடித்தனர். ஆஸ்திரியர் பீரங்கிப்படையின் சகாயத்தால் கொரிசியாவுக்குக் கிழக்கேயுள்ள குன்றுகளின்மேலுள்ள தமது ஸ்தலங்களை விடாமல் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்,

13வ இத்தாலியர் கார்சோபகுதியில் பலமான ஸதலத்தைப்பிடித்துக்கொண்டனர். 1565பேரையும் சில பீரங்கிகளையும் பிடித்தனர்.

14வ கார்சோவிலுள்ள 212 ம் குன்றுக்குக்கிழக்கேசத்துருவின்பலமானஅரண்வரிசையை இத்தாலியர்பிளந்து உட்புகுந்து 800 பேரைச் சிறைப்படுத்தினர்.

16வ செவ்வாய்க்கிழமைகாலை இத்தாலிய கடல்விமானங்கள் ட்ரீட்ஸட் என்னுமிடத்திலிருக்கும் தொழிற்சாலையையும் விமானக் கொட்டகைகளையுந்தாக்கித் தீவிபத்துண்டாக்கின

கார்சோபீட்பூமியில் இத்தாலியர் சத்துரு அரண்களைப்பிடித்து 350 பைரையும் சிறைப்படுத்தினர் இங்கிலாந்துக்கும் இத்தாலிக்கும் வியாபார சம்பந்தமான உடன்படிக்கை நிறைவேறிற்று

ஒரு இத்தாலியஆகாயப்படை பிரையேசினுஸ்டேசனுக்கருகிலும் டான்டெபர்க் ஸ்டேசனுக்கருகிலுமுள்ள தெயிற்பாதைமீதும் ராணுவ ஸ்தலங்கள்மீதும் இரண்டரை டன்நிறையுள்ள குண்டுகளையெறிந்து பலனடைந்தது

18வ சேற்றிரவு சத்துருக்கடல்விமானங்கள்வெனிஸ்கிராடோ லாகூன்என்னும் இடங்கள்மேல் குண்டுகளையெறிந்து சொற்பசேதம்விளைத்தது உயிர்ச்சேதமில்லை

இரவும்பகலும் ஓயாமற் சண்டைநடக்கிறது ஆஸதிரிய பீரங்கிப்படை துர்ப்பலமாயிருக்கிறது

பால்கன்.

6வ பால்கன்பக்கத்தில்டனூப்நதியில் சியூர்செயோ பட்டணத்திற்குஎதிரில் ஒரு தீவைப் பல்கேரியர் தாக்கினார்கள் ஆயினும் ருமேனிய காலாட்படை அவர்கள்மேற்சுட்டு அவர்களைத் துரத்தினது இராணுவஇரகசியங்களைத் தெரிவிக்காதபடி ரஸ்ட்சக்பட்டணத்தில் வேலையாயிருந்த ருமேனியர்கள் உள்நாடுகளுக்குக் கொண்டுபோகப் பட்டார்கள்

9வ ஒரு பிரித்தானிய காவற்படை டாய்ரானுக்குத்தெற்கே ஒரு பல்கேரியபடையைத் திடீரென்றுதாக்கிக்கலைத்துவிட்டது செர்வியர் பல்கேரியரைஅப்புறப்படுத்தி ரிசிகாவை வசப்படுத்தினர்

11வ டாய்ரன்நகரைப் பிரான்சர் பீரங்கிகளால்தகர்க்க ஆரம்பித்துவிட்டார்கள் அதற்குத்தெற்கே ஒருகுன்றையும் 5 மைல்தூரத்துள்ள தெயில்ஸடேசனையும் வசப்படுத்திக்கொண்டார்கள்

12வ மண்ணெய்ப்பையும் பிரயாணிகளையும் ஏற்றிக்கொண்டு சலோனிக்காவிலிருந்துவோலோநகருக்குச்சென்ற ஏலன் சேரிபோ என்னும் கிரேக்ககப்பல் தீப்பற்றியெரிந்தது அதிலிருந்த குத்திரம்வெடித்து 10 பேர் கொல்லப்பட்டுப் பலர் காயப்பட்டனர்

ருமேனியாவில் ஹடெஸ்டியிலுள்ள ஒரு வெடிமருந்துச் சாலையில் வெடிவிபத்துண்டாய் 115 பேர் கொல்லப்பட்டனர் 130 பேர்காயப்பட்டனர்

18வ பிரான்சியசேனைகள் கனத்த பீரங்கிகளால்தகர்த்து டாய்ரன் ஏரிக்குத்தெற்கிலுள்ள பல்கேரிய ஸதலங்களை வசப்படுத்தின பின்பு செர்விய எல்லைக்குள்ளிருக்கும் டார்டில் ஹில்என்னுங்குன்றில்போய் நிலையாய்ச் சேர்ந்துகொண்டார்கள் சத்துருக்களுக்கு மிகுசேதம்

கயாபுட்டில் பல்கேரியர் ருமேனியர்மேல் பீரங்கிப்பிரயோகஞ் செய்தார்கள் அதன்மேல் சண்டையுண்டாயிற்று டான்யூப்நதியிலுள்ள பல்கேரிய துறைமுகங்களுக்கு ஆஸதிரியகப்பல்கள்மொட்டார்வண்டிகளையும் மண்ணெய்யையும் பாலங்கட்டும் சாமான்களையும் கொண்டுவந்து சேர்த்தன பலஇடங்களில் ஆஸதிரிய பண்டசாலைகள் டோரோசோவிலுள்ள ஆர்மீனியரால் பிடிக்கப்பட்டன ருமேனியா நடுவுநிலைமையில் நிற்பதற்காக செர்மனி ருமேனியாவுக்கு ஆஸ்திரிய பிரதேசத்தைக்கொடுத்திருக்கிறதாம்

துருக்கிய ருஷிய யுத்தம்:

7வ அரேபியாவில் ஷெரிப் ஹூஸெய்னுடைய வல்லமையும் அதிகாரமும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. சையெத் எல் இத்ரிஸியென்ற ஓர் கோத்திரத்தலைவன் துர்க்கியர்மேல் யுத்தம் கூறி அஸ்சீரியாவில்இதுவரையில் துருக்கியர் கையிலிருந்த ஒரேபட்டணமாகிய கன்பிதாபட்டணத்தையும் பிடித்துக்கொண்டார்கள்.

7வ எகிப்து தேசத்திற்குச்சமீபத்தில் 1400) துருக்கியர் சுவேஸகால்வாயைத்தாக்க முஸ்திப்புச்செய்துகொண்டு முன்வந்தார்கள். ஆயினும் அவர்கள் பெருத்த தோல்வியடைந்தார்கள். 45 உத்தியோகஸ்தரும் 3100 போர்வீரரும் பிரித்தானியரால் சிறைபிடிக்கப்பட்டார்கள் துருக்கியர் தோற்றுப்போனதைப்பற்றி எகிப்தியர் சந்தோஷம் கொண்டாடுகிறார்கள்

8வ பிரித்தானிய குதிரைப்படைகள் கேடியாவுக்குக்கிழக்கே 6 மைல்தூரத்தில் துருக்க பின்னணிகளுடன் சண்டைசெய்கின்றன அப்பகுதியில் சத்துருக்கள் முன்னேற ஆரம்பித்தபோது அரண்களைத் தயார்செய்துகொண்டார்கள் போர்க்களத்திலிருந்துசத்துருக்களையப்புறப்படுத்தல்நடைபெற்றுவருகிறது. திரளான துப்பாக்கிகளும் யுத்தசாமான்களும் வந்துசேருகின்றன,

4வ சத்துருக்கள் நம்மைத்திருப்பிஎதிர்த்தபகுதியில் 200 சத்துருப்பிணங்கள் புதைக்கப்பட்டன ஓர்விமானம் போட்செட்நகர்மேலும் சுவேஸ்நகர்மேலும் குண்டெறிந்து சொற்பசேதத்தைவிளைத்தது.

9வ கேடியாவில் நாம் சத்துருக்களைப்பின்தொடருகிறோம் துருக்க பின்னணிகள் வடக்கேயும் மேற்கேயும் பின்னிடும்படி செய்யப்பட்டன தென்திசையில் நமது ஒட்டைப்படை துருக்கரைப் பலமாய்த்தாக்கி அவர்களை அரணிலிருந்து அப்புறப்படுத்திவிட்டது நாம் இன்னும் சிலரைச்சிறைபிடித்தோம் சத்துருப்படை கேடியாவுக்குக் கிழக்கே 15 மைல்தூரத்திலிருக்கும் பிர் எல் ஆபோவுக்கு வடக்குத்தெற்கு வரிசைக்குப் பின்னிட்டுவிட்டதென்று அங்கிலோஅறிக்கை கூறுகிறது

துருக்கர் ரோமானியில் சிலஇடங்களில் முன்னேறி அங்கிலேயரையும் ஆஸதிரியரையும் பணிந்துவிடும்படி கேட்டுக்கொண்டிருந்தார்கள் மெசின்பீரங்கியால் திருப்பிஎதிர்க்கப்பட்டார்கள் துருக்கர் தாகத்தால் ஒட்டகங்களைக்கொன்று அவர்களின் இரத்தத்தைப் பானம்பண்ணி அவஸ்தைப்படநேரிட்டது

13வ துருக்கர் சுவேஸ் கால்வாயிலிருந்து 50 மைல்தூரம்வரை பின்தொடரப்பட்டார்கள் சத்துருக்களுக்கு 4 பீரங்கிகளும் ஏழாயிரம் பேரும் சேதமென மதிக்கப்படுகிறது அதில் 3534 பேர் சிறைபிடிக்கப்பட்டவர்கள்

15வ ருஷியர் பெர்சியாவிலுள்ள சர்க்கிஸ்என்னுமிடத்திற்கருகில் ஒருபலமான துருக்கஸ்தலத்தை வசப்படுத்தினர் துருக்கர் தென்பக்கமாய்ப்பின்செல்லுகின்றனர் ருஷியகுதிரைப்படை அவர்களைத் தொடர்ந்துசெல்கிறது

கடற்சங்கதி.

௪௳ கிளாக்டன் எனும் சரக்கம்எடுக்குங்கப்பல் ௯௳ மத்தியதரைக்கடலில் டொர்பிடோவெடியால் மூழ்கடிக்கப்பட்டது ௨ இஞ்சினீயரும் வேறு ௧ பேருங் காணப்படவில்லை கு பேர் சொற்பகாயமடைந்தனர்

வேறொரு தென்மார்க்குக்கப்பலும் மூழ்கடிக்கப்பட்டது ஆரோ என்னும் வில்சன்கம்பெனிக்கப்பலும் டொர்பிடோவெடியுண்டதாம்

௭௳ மௌன்ட்செனிஸடன் என்னுங்கப்பலும் மூழ்கடிக்கப்பட்டது டாட்டன்காம், பலோனியன் ஆகிய இரண்டு பிரித்தானியகப்பல்களும் டிரிகூபிலஎன்னும் கிரேக்ககப்பலும் சீனு என்னும் இத்தாலியகப்பலும் செகர்சுர்க் என்னும் தென்மார்க்ககப்பலும் கரமாலஎன்னும் சுவேதன்கப்பலும் மூழ்கடிக்கப்பட்டன

செர்மனியரால்பிடித்த திமிஸ்என்னும் சுவீடன்தேசக்கப்பல் நிலக்கரியை இறக்குவதற்காகக் கோர்த்லான்டின் துறைமுகமொன்றுக்குக் கொண்டுபோகப்பட்டது அதைத் திரும்பப்பிரயாணஞ்செய்யக்கூடாதென்று சுவீடன்அரசு தடுத்துவிட்டது சுவீடன் செர்மனிய யுத்தக்கப்பல்கள் துறைமுகத்துக்குவெளியே நிற்கின்றன

௯௳ டிரிடென்டு என்னும் பிரித்தானியகப்பலும் டிமாரிஸ் என்னுஞ் சிறியகப்பலும் மூழ்கடிக்கப்பட்டன

டக் என்னும் தென்மார்க்குக்கப்பல் காடிகட்சலசந்தியில் ஒரு செர்மனிய டொர்பிடோப்படகால் பிடிக்கப்பட்டு லைவயின்மியூண்டி என்னுந் துறைமுகத்துக்குக் கொண்டுபோகப்பட்டது

௧௨ டிரெட்நூட் என்னும் பெரியகப்பல்களடங்கிய ஒரு பெரிய செர்மனியகடற்படை வியாழக்கிழமை கீல்கால்வாயைவிட்டுப் புறப்பட்டு லிட்டில் பெல்ட் என்னுஞ்சலசந்திவழியாய் வேகமாய்ச்சென்றதாகச் சொல்லப்படுகிறது

ஒரு பிரித்தானியகப்பலும் ஒரு ஸ்பானியகப்பலும் இரண்டு பிரான்சியகப்பலும் ஒரு நோர்வேக்கப்பலும் ஒரு யப்பான்கப்பலுமான ஆறுகப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன மூன்று இங்கிலீஷ்கால்வாயிலும் யப்பான்கப்பல் மத்தியதரைக்கடலிலும் மூழ்கடிக்கப்பட்டன அதிலிருந்த மாலுமிகள்மேல் சப்மரின் பீரங்கிப்பிரயோகஞ்செய்தது

சான்பெர்னன்டோ என்னும் பிரித்தானியகப்பலும் செபஸதியானோ என்னும் இத்தாலியகப்பலும் கென்திரி எலிசா மேரிஎன்னும் பிரான்சுக்கப்பலும் டினிவாங் ன்மராட்டா என்னும் இரண்டு தென்மார்க்குகப்பல்களும் சோரா என்னும் நோர்வேகப்பலுமுட்பட பதினொருகப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன

௧௪௳ நியூரிஸ்என்னும் இத்தாலியகப்பலும் ஒரு இத்தாலிய பாய்க்கப்பலும் ஒரு பிரான்சிய பாய்க்கப்பலும் மூழ்கடிக்கப்பட்டன

லாஸ்கலஎன்னும் பிரித்தானியயுத்தக்கப்பல் ௧௬௳ ஒல்லாந்தைச்சேர்ந்த கடற்கரைக்கப்பால் டொர்பிடோவெடியுண்டோ சுரங்கத்திற்பட்டோ மூழ்கிப்போயிற்று இரண்டு உத்தியோகஸதரும் நான்கு மனிதருங் காணப்படவில்லை ஒருஉத்தியோகஸதனும் ஒருமனிதனுங் காயமடைந்தனர்

ஐவார்என்னும் தென்மார்க்குக்கப்பலும் டேடிஎன்னும் இத்தாலியகப்பலும் மத்தியதரைக்கடலில் மூழ்கடிக்கப்பட்டன

அமரிக்காவிலிருந்து கிளாஸகோவுக்குச் சென்ற ஆர்டாஸ்டர்என்னும் நோர்வேக்கப்பலில் ஒருவெடிவிபத்துண்டாய் இருதுண்டாய்ப்பிளந்துபோயிற்று மாலுமிகள் கரைசேர்க்கப்பட்டார்கள்

௧௫௳ வடகடலில் ஓர் சுவீடன்தேசக் கப்பலை ஒருசெப்பிலினின் பீரங்கிகளால்தகர்க்கையில் ஒரு பிரித்தானியடிஸ்டிரோயர்க்கப்பலால் தாக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டது

௧௯௳ டாக்ஸஸாரி என்னும் ஸ்பானியகப்பலும் சான்சியோவர்ன்னி பாட்டிஸ்டா என்னும் இத்தாலியகப்பலும் இன்னும்பல பாய்க்கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன

பிரித்தானிய சங்கதி.

௧௨ இன்று விடியற்காலை சத்துரு ஆகாயக்கப்பல்கள் இங்கிலாந்தின் கீழ்க்கரையைக்கடந்துசென்றன வேறொரு ஆகாயக்கப்பல் ஸகொத்லந்தின் தென்கீழ்ப்பாகத்தில் காணப்பட்டது அங்கு அது பலவிடங்களில் குண்டுகளையெறிந்தது இதுவரை ௩ ஸ்திரிகள் கொல்லப்பட்டும் ௧௪ பேர் காயமடைந்ததாகவுந் தெரிகிறது ராணுவசம்பந்தமான சேதமில்லை நமது ஆயுதம்பூண்டவிமானங்கள் மேலெழும்பி அவைகளை அப்புறப்படுத்தின சில இடங்களில் தீவைக்குங்குண்டும் வெடிக்குண்டும் எறியப்பட்டனவாம் கிழக்குக்கடற்கரையில் ௨௦ குண்டுகள் எறியப்பட்டன அவைகள் பெரும்பாலும் தீவைக்குங்குண்டுகள். இரண்டொருவர்கொல்லப்பட்டும் ௧௦ பேர் காயமுமடைந்தார்கள் சொற்ப தீவிபத்துகளுமுண்டாயின பின்பின் ஏழு அல்லது பத்துக்கப்பல்கள் கலந்துவேலைசெய்தனவாம் இதனால் ஒரு மனிதனும் ௨ ஸதிரிகளும் ௩ குழந்தைகளுங் கொல்லப்பட்டார்களென்றும் ௫ மனிதரும் ௬ ஸ்திரிகளும் ௬ குழந்தைகளுங் காயப்பட்டார்களென்றும் உத்தியோகமுறையில் தெரிவிக்கப்படுகிறது

௧௦௳ ஐக்கியநாடுகளுக்கும் குடியேற்றநாடுகளுக்குக் கொடுத்திருக்கும் ௮௦ கோடிபவுண்போக மிகுதி பங்குனி௴ ௧௭௳ வரையில் நமக்கு ௨௯௪ கோடிபவுண் கடனிருக்கிறதென்றும் அதுநமக்குக் கிடைக்கக்கூடிய ஒருவருஷ வருமானத்திலும் குறைவுதானென்றும் ஆகவே எவ்வளவுகாலத்துக்கு யுத்தம்நடந்தாலும் சமாளிக்கக்கூடுமென்றும் அரசிறைமந்திரியான மெஸ், மாக்கென்னோசொன்னார்

கட்டுக்காவலில் வைக்கப்பட்டிருக்கிற சாதாரண சனங்களில் ௪௫ வயதுக்கு மேற்பட்டோரை [illegible] கொடுக்கக்கூடியவர்களைக்கொடுத்து அவ்வளவுபேரை மாற்றிக்கொள்ளப் பிரித்தானியஅரசு சம்மதித்திருக்கிறது

௧௨—இருசத்துருக்கடல்விமானம் பகலில்டோவர்நகர்மேல்பறந்து நான்கு குண்டுகளை எறிந்தன பொருள்நட்டமில்லை ஆயுதம்பூண்ட அங்கிலோவிமானங்கள் அவைகளைத்தாக்கிப் பின்தொடர்ந்தன ஒரு உத்தியோகஸதரும் ஆறுமனிதருங் காயப்பட்டார்கள்

௧௫௳ நமது சக்கிரவர்த்தி பிரான்சிய யுத்தமுனைக்குப்போய் நுணுக்கமாய்ப்பார்வையிட்டு அங்குள்ளாரைப்புகழ்ந்து மறுபடியும் இங்கிலந்துசேர்ந்தார்

செர்மனி

ராதன்ஸ்டீன் என்னுமிடத்திலிருக்கும் பீரங்கிச்சாலைவெடிவிபத்தால் சேதமாகி 50 பேர்கொல்லப்பட்டு 72 பேர்காயப்பட்டார்கள்

அமரிக்காவுக்குஅனுப்பின வியாபாரச்சப்மரீன்கப்பல்களிலொன்றாகிய பிரிமேன் மூழ்கடிக்கப்பட்டிருக்கலாமென்று செர்மனியர்நம்புகின்றனர்

சீனவும் யப்பானும்

சிங்கியாடங்கில் யப்பான் போர்வீரரில் 9 பேரைச்சீனர்கொன்றனர் 7 பேர்காயமடைந்தனர் ஒருபொலிஸ உத்தியோகஸ்தர் கொல்லப்பட்டார் 18வ இராமுழுதும்சண்டை நடந்தது முக்டன்தேசாதிபதி சீனரைக் கலகஞ்செய்யாதிருக்கும்படி கட்டளையிட்டு யப்பானியஸ்தானுபதியைப் பார்த்து நடந்தகாரியத்திற்காய்த் தாம்துக்கிப்பதாய்ச்சொன்னார்

அமரிக்கா.

நான்குடிரெட்நூட் என்னும் பெரியசண்டைக்கப்பல்களையும் நான்குசண்டைக் குருசர்க் கப்பல்களையும்செய்யும்படியும் கடற்படையை மூன்றுவருடமட்டும்விருத்திசெய்யும்படியும் மந்திரசபைஉத்தரவுசெய்ததை சனப்பிரதிநிதிசபைஏற்றுக்கொண்டது தென்மார்க்கிலஅதைச்சேர்ந்த வெஸடு இன்டீஸ தீவுகளை ஐக்கியஅரசுக்குவிற்பதை லோயர்ஹௌவுஸசபையில் அதிகரித்த சம்மதத்தினால் தீர்மானிக்கப்பட்டது

கிழாபிரிக்கா

கிழாபிரிக்காவில் செர்மனிய சிறிய துறைமுகமாகிய சதானியைப்பிடித்துக்கொண்டார்கள் வேறுசண்டைகளும் நடந்து கொண்டிருக்கின்றன மேஜர் ஜெனெரல் வான்டெர் வெண்ட்டெரும் பிரிகாடியர் ஜெனரல் நார்தியும் செர்மனியரையும் அவர்களைச்சேர்ந்த சுதேசபடைகளையும் துரத்திக்கொண்டுபோகிறார்கள்

9வ செர்மனிய கிழக்காபிரிக்காவின் வடமேற்குப்பக்கத்திலிருந்து சத்துருக்கள்முழுதும் அப்புறப்படுத்தப்பட்டார்கள் பெல்சியர் அவர்களைப்பின்தொடர்ந்து செல்கிறார்கள்

யுத்தத்தையடுத்த செய்திகள்

5வ செர்மன் சப்லின் ஆகாயக்கப்பல்கள் ஓயாமல் உலாந்தா தேசத்தின்மேல் பறந்துபோவதால் உலாந்தாவின் நடுநிலைமையைப் பங்கப்படுத்துகிறதைப்பற்றி உலாந்தா அரசு ஆலோசனைசெய்து எல்லையைமுற்றும் அடைத்துப்போட்டு செர்மனிக்கு கொஞ்சமேனும் சாமான்கள் போகாதபடிதடுக்கவேண்டுமென்றுதீர்மானித்திருக்கிறது

ஜேர்மனியில் இறக்கப்படும் இத்தாலியபொருட்களுக்குஉயர்ந்ததீர்வைவிதிக்கப்பட்டிருக்கிறது

பிரான்சின் வடபாகத்திலிருந்து தேசப்பிரஷ்டஞ்செய்யப்பட்டவர்களில் ஸ்திரீகளை மாத்திரம் விட்டுவிடும்படி பாப்பரசர் கேட்டிருக்கிறாராம் அவர்களில் 20,000 பேர் அறுப்புக்காலத்தின்பின்பு அனுப்பிவிடப் படுவார்களென கவேரன்ஜனரின் பெரியபத்திரிகைக்குத் தெரிவித்தார்

போர்த்துக்கல் பார்லிமெந்துகூடி ஐரோப்பியயுத்தத்தில் கலக்கும்படி பிரித்தானியா தம்மை அழைப்பதை ஒப்புக்கொள்ளும்படிதீர்மானித்தது. ஹொலாந்தில்கட்டாயராணுவசட்டம் பார்லிமெந்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறது

அமெரிக்காவிலிருந்து பிரித்தானியாவுக்கு ஐந்துகோடி பவுண் கடன்கிடைக்கும்

கடிதம்.

ஸ்ரீ செந்திநாதையர் இருக்குவேதத்திற் கற்பித்திருக்கிற இல்லாச்சிவன்.

ஐயா,

எம் சைவ தர்க்கக்காரர் நியாயத்துறையைப் பற்றிநின்று யுத்தமாடி வெல்ல ஆற்றுமல் சமாதானம்போய்விடும் வழியைநாடி "இருகட்சிக்கும் பொதுவான ஓர் போதிய மனுஷனை" அனுப்பி "சத்தியவேதபாதுகாவல"னிலே இப்போதைக்குத் தர்க்க விஷயங்களை வெளிப்படுத்தாது விடும்படி கேட்டுக்கொண்டமையால் எமக்கு அப்பத்திரிகையில் இடங்கிடையாமற்போயிற்று. ஆயின் எமது 500 ரூபா பந்தயத்தைப் பெற்றுக்கொள்ளும்நோக்கமாகப்போலும் காசிவாசி ஸ்ரீ செந்திநாதையர் இருக்குவேதத்துச் சிவன் இருக்கிறதாகப் போலிநியாயம் பேசி இந்துசாதனத்தில் எழுதியிருக்கிறபடியால் நாம் சைவர்விரும்பும் சமாதானத்தைக் குழப்பாமலே அதற்கு ஒருவிடை சொல்லவேண்டியிருக்கிறது. ஐயர் பறையனுக்கு என்ன கிரந்தமதெரியுமென்று ஐயுறுதயடிக்கு சம்ஸ்கிருதத்திலும் சைவருடைய வேதநூல்களிலும் வல்லவரான ஓர் பண்டிதரிடம் நாம் ஐயருடைய இருக்குவேத சுலோகத்து மொழிபெயர்ப்பைக்காட்டி அதற்கு அப்பண்டிதர் எழுதித்தந்த குறிப்பைப் பின்னுற் பிரசுரிக்கிறோம்:—

இருக்த, 10-92-9.

"ஸ்தோமம் வோ அத்ய ருத்ரய சிக்வஸே க்ஷயத்வீருய நமஸா திதிஷ்டந
யேபி: சிவ: ஸ்வவாந் ஏவயாவபிர் திவ: ஸிஷக்தி ஸ்வயசா: நிகாமபி:

இதற்குப் பதப்பொருள்.

வ:—நீவிர்
அத்ய—இன்று
சிக்வஸே, க்ஷயத்வீருய, ருத்ரய—வலிமையுடையவனும், வீரர்களை ஆள்பவனுமாகிய உருத்திரனுக்கு [மருத்துக்களுக்கும்]
நமஸா—நமஸ்காரங்களோடு
ஸ்தோமம்—ஸ்தோத்திரத்தை
திதிஷ்டந—செய்யுங்கள்
சிவ:, ஸ்வவாந், ஸ்வயசா:—தயவுள்ளவனும், ஐசுவரியவானும், தன்னாலேயே புகழுடையவனுமாகிய அவன் [உருத்திரன்]
யேபி:, ஏவயாவபி:, நிகாமபி:—தீவிரமானவைகளும், ஆசையினையுடையவைகளுமாகிய அவை [மருத்துக்]களோடு
திவ:—வானத்திலிருந்து
ஸிஷக்தி—காக்கின்றான்

குறிப்புகள்.

இந்த மந்திரத்தில் புயல் தெய்வமாகிய உருத்திரனையும் அவனோடுகூடிய (அவன் மக்களெனப்படும்) காற்றுத்தெய்வங்களாகிய மருத்துக்களையுமே துதித்திருக்கிறது. "சிக்வஸே", "க்ஷயத்வீருய" "சிவ:" "ஸ்வவாந்" "ஸ்வயசா:" என்ற ஐந்துமொழிகளும் உருத்திரனுக்கும், "ஏவயாவபி:", "நிகாமபி:" எனும் இரண்டுமொழிகளும் மருத்துக்களுக்கும் விசேடணங்களாம். உருத்திரனுடைய ஐந்து விசேடணங்களில் முந்திய இரண்டும் நான்காம் வேற்றுமையிலும், பிந்திய மூன்றும் எழுவாய்நிலையிலும் நிற்கின்றமைக்கு நியாயம் என்னவெனில் இம்மந்திரம் இரண்டுபாகமாகி இரண்டு பயனிலைகளையுடைய இருவசனங்களா யிருக்கின்றமையேயாம். வலிமையுடையவனும் வீரர்களை ஆள்பவனுமாகிய உருத்திரனுக்குத் தோத்திரத்தைச்செய்யுங்கள் என்றது ஒருபாகம். செய்யுங்கள் என்ற பயனிலையின் நிமித்தம் இதிலே "சிக்வஸே" முதலிய விசேடணங்கள் நான்காம் வேற்றுமையில் நிற்பது சமஸ்கிருதரீதியாயிற்று. மற்றப்பாகம் யாதெனில்: தயவுள்ளவனும் ஐசுவரியவானும் தன்னாலேயே புகழுடையவனுமாகிய அவ்வுருத்திரன் மருத்துக்களோடு காக்கின்றான் என்பதாம். இதில் காக்கின்றான் என்ற பயனிலையின்பொருட்டு "சிவ:" முதலிய விசேடணங்கள் மூன்றும் எழுவாய் நிலையையடைதலேநீதி. மருத்துக்களோடு வானத்தினின்று காக்கின்றவன் உருத்திரனேயாதலால் அவ்வுருத்திரனுக்கே சிவ: (தயவுள்ளவன்) ஆதிய மொழிகள் விசேடணமாக அமையவேண்டுமென்பதும், முந்திய விசேடணங்கள் வேற்றுமைநிலையில்வர இம்மூன்றும் எழுவாய்நிலையில்வந்தமை வசனம் இருபாற்பட்டுகின்றதினுல் வேண்டப்பட்டதென்பதும் வெளிப்படை. பலியிடுவோரைக் காக்கின்றமையே துதிக்கு நியாயமாக எடுத்தோதப்படுகின்றது. ஆதலால் மந்திரத்தின் இருபாகத்திலும் உருத்திரனாகிய ஒருவனே பேசப்படுகிறான் என்பது நிச்சயம். எவன் எம்மைக் காக்கின்றானோ அந்த உருத்திரன் துதிக்கப்படவேண்டும் என்பது இதின் சாரம். அப்பால் மருத்துக்களோடு கூடினவனென "சிவ" என்னப்படுகின்றமையால், இம்மொழி சாத்தனோடுகூடிய புயலாகிய உருத்திரனுக்கே விசேடணமாகுமொழிய இக்கூட்டுறவறியாத சிவன் எனும் வேறோர் தெய்வமுண்டென்பது இங்கு சொல்லவரா இலவலேசமும் நியாயமில்லை. மந்திரத்தின் பின்னாடப்பொருள்: உருத்திரனையும் மருத்துக்களையும் தோத்திரியுங்கள், ஏனெனில் அவன் மருத்துக்களோடு கூட உம்மைக் காக்கின்றான் என்பதுதான். மற்ற விசேடணங்களெல்லாம் இங்கு பேச எடுத்துக்கொள்ளப்பட்ட உருத்திரனையும் மருத்துக்களையுமே சாருமன்றி இக்காலது இருக்குவேத மந்திரத்தின் வேறெவ்விடத்திலாவது ஓர்போதும் பேசப்படாத சிவன் எனும் பிற்காலத் தெய்வத்தைச் சாரவே சாரமாட்டா.

ஸ்ரீ செந்திநாதையர்செய்த மொழிபெயர்ப்போ எம் பண்டிதர்செய்தமொழிபெயர்ப்போ எது சொன்னிலைபொருணிலைகளுக்கும் யுத்திக்கும் பொருந்தியதெனக் கற்றோர் தீர்மானிக்கட்டும். ஐயருடைய மொழிபெயர்ப்பு "உருத்திரனைத் துதியுங்கள்; ஏனெனில் சிவன்காக்கிறார்" என்றசொன்னுலொப்ப ஒரு மதிகேடான நியாயத்தைப் பிறப்பிப்பதினால் முழுதும் தவறானதேயென்பது கற்றோருக்கும் மற்றோருக்கும் தெற்றெனப் புலப்படும். எம்பண்டிதருடைய மொழிபெயர்ப்பின்படி உருத்திரனைத் துதியுங்கள்; ஏனெனில் அந்தத் தயவுள்ள தெய்வம் உம்மைக் காக்கிறது என்று முடிந்து பைத்தியமில்லாதவர்கள் பேசுகிற நல்லபேச்சாய்க் காணப்படுகிறது. அன்றியும் 'சிவ' என்றசொல்லு எழுவாயில் நிற்கிறபடியால் அது உருத்திரனுக்கு விசேடணமல்லவென்றும், வேறொரு தெய்வப்பெயராகவேண்டுமென்றும் ஐயர்சொல்வது சரியென்றால், அந்தச் சிவ என்ற சொல்லைப்போலவே எழுவாயாய்நிற்கிற ஸ்வவாந் ஸ்வயசா என்றசொல்லுகளும் வேறிரண்டு தெய்வப்பெயராகவன்றோ வரவேண்டும்? ஆகவே, புன்னைமா நகாவாசி வடகலாதட்ட ஒலமிட்டுஅழைத்துக்கொண்டுவந்த பெரிய ஐயாராலும் சிவன் இருக்குவேதத்தில் இருக்கிறார் என்றுகாட்ட இயலாமற் போய்விட்டதென்பதே திண்ணம்.

இங்ஙனம்
பழந்தடி.

பி சுப்பராயின்
அபூர்வஆயுர்வேத ஔஷதங்கள்

31 வசந்தகுசுமாகரம்—சக்கரையோடு கூடியதும் அதாவது மதுமேகம்சர்க்கரையில்லாததுமாகிய நீரிழிவு பிரமேகம், மூத்திரகிருச்சிரம், தாதுநஷ்டம்பலவீனம் உடல்வெழுப்பு இந்திரியநஷ்டம் அதிதாகம் இருமல் நாக்குவரண்டுபோதல்களைப்பு மயக்கம்அசதி கைகாலெரிவு முதலிய அனேகவியாதிகள் சீக்கிரம் அடியோடு குணமாகும். மிகவும் விலையுயர்ந்தஔஷதம். இது செய்வதில் முத்து தங்கம் கஸ்தூரி முதலிய இன்னும் விலைபெற்ற சாமான்கள்சேருகின்றன, எழுவேளைய ஔஷதம்விலை ரூபா 5, வி பி செலவுஅணா 5 பிரத்தியேகம்.

33 சித்தமகரத்துவஜம்—இது மகரத்துவசங்களைவிடச் சிறந்தஔஷதம். இதனுல் தீராவியாதி ஒன்றுமில்லை. சர்வசுரங்கள் காசம் இருமல்க்ஷயம் அக்கினிமாந்தம் காலரு சீதபேதி இரத்தபேதி சகலவாய்வு இன்னும் எல்லாவியாதிகளுந்தீரும், இம்மருந்து உபயோகித்தவருக்கு வயசு நூறுவருஷமானுலும் பூரணபுருஷத்தன்மை குறையாமலிருக்குமென்பதிற் சந்தேகமில்லை தோலா ஒன்றுக்கு ரூபா 80. எழுவேளைக்குள்ளமருந்து ரூபா 3, விபி செலவுஅணா 5பிரத்தியேகம்

34 வாயுசம்ஹாரி—கை கால் கணுக்களின்பிடிப்பு வீக்கம் கடுப்பு நாற்முடக்கு தேகத்தில் வலிச்சல் குத்தல் குடைதல் தலைநோய் பக்கசூலை பாரிசவாய்வு திமிர்வாய்வு அசிரணம் குன்மம் அண்டவாய்வு சூலை காதம் மல சலக்கட்டு முதலிய அனேகவித ரோகங்களுந்தீரும். டப்பாவொன்றுக்கு விலைரூபா 1, விபிசெலவு 1 முதல் 2டப்பாக்கள்வரையிலனுப்ப அணா5பிரத்தியேகம்.

35 காலருஎன்னும்வாந்திபேதிக்கு மருந்து—இக்கொடியநோய்க்கு இதுவே கண்டஔஷதம் டப்பா ஒன்றுக்கு ரூபா 1.வி பி செலவு 1 முதல் டப்பாக்கள்வரையிலனுப்ப அணா5பிரத்தியேகம்

36 மலபந்தநிவாரணி—மலாலக்கட்டு அக்கினிமாந்தம் வாய்வு குடல்புரட்டல் மூலச்சூடு காந்தல் இளைப்பு மூலம் சொரியாமை புளித்தேப்பம்தீரும். தினம் தப்பாமல் காலாகாலங்களில் மலம்சுத்தியமாகும் டப்பா ஒன்றுக்கு விலை அணா 10, வி பி செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையிலனுப்ப அணா 5 பிரத்தியேகம்

39 வீகநாதிலா—எப்பேர்ப்பட்ட தலைவலியும் நெற்றியின் இரண்டு பொட்டுகளிலும் இம்மருந்து கொஞ்சந்தடவி நன்றாகத்தேய்க்கவேண்டும் இடுப்புநோய் கழுத்துநோய் பக்கசூலை கைகால்பிடிப்பு முதலியவும் இன்னும்தேகத்தில் காணும்மற்றமுள்ள சகலவலிகளுக்கும் இம்மருந்தில்கொஞ்சமெடுத்துநோயுள்ளவிடத்தில் நன்றாய்த்தேய்க்கச்சுகமாகும், தேள் நட்டுவக்காலி பூரான் இதுகள்கொட்டினுல் அல்லது கடித்த விடத்தில் இம்மருந்தைத் தடவி நன்றாகத் தேய்த்தால் சௌக்கியமாகும், சீசாஒன்றுக்கு அணாஎட்டு விபி செலவு ஒன்று முதல் ஆறுசீசாக்கள்வரையில் அணாஐந்து பிரத்தியேகம்

40 சுகுமாரதிலா—இதைப் பிரதிதினமும் குளித்தஇடத்தில் பூசிவந்தால் சோர்வு நரம்புகளின் தளர்ச்சிநீங்கி மிருந்த வலிவுகொள்ளும் இழந்துபோனசத்தி முற்றிலும்பெற்று சுகிக்கலாம் விலைசீசாவொன்றுக்கு ரூபா ஒன்று வி பி செலவுஒன்றுமுதல் ஆறுசீசாக்கள்வரையில் அணா ஐந்து பிரத்தியேகம்

தாம்பூலவிஹாரம்—தாம்பூலந் தரிப்பவர்களுக்கு அதிஅவசியமான மணக்களிப்புண்டாகக்கூடிய வாசனைக்கலவை விலை டப்பா ஒன்றுக்கு அணாநாலு வி பி செலவு ஒன்றுமுதல் பன்னிரண்டுடப்பாக்கள்வரையில் அணா 5 பிரத்தியேகம்.

சோடாவாடர்பவுடர்—இச்சூரணத்தில் கொஞ்சமெடுத்துக் குளிர்ந்த சலத்துடன் கலந்துகொண்டால் அதிசுசிதமான சுயமான சோடாவாடருண்டாகும் ஒருசீசாவிலுள்ள பவுடர் சுமார் 8சீசா சோடாவாடர்செய்யப்போதுமானது விலைசீசாவொன்றுக்கு அணா 6 வி பி செலவுஒன்றுமுதல் 4 சீசாக்கள்வரையில் அணா5பிரத்தியேகம்

லெமனேட் பவுடர்—இச்சூரணத்தில் கொஞ்சமெடுத்துக் குளிர்ந்தசலத்துடன் கலந்தால் அதி உத்தமமான லெமனேட் தயாராகிவிடும் ஒருசீசாவிலுள்ள சூரணம் சுமார் 8 பெரிய சீசா லெமனேட் செய்யப்போதுமானது விலை சீசா ஒன்றுக்கு அணா 6 வி பி செலவு ஒன்றுமுதல்4 சீசாக்கள்வரையில் அணா 5 பிரத்தியேகம்

பன்னீர்—இப்பன்னீர் அரைஅவுன்ஸ் சீசாவில் விற்கப்படுகிறது, இச்சிறு சீசாவிலுள்ள பன்னீரை3 பெரியசீசா வெந்நீருடன் கலந்தால் முதல்தரமான 3 சீசாபன்னீராகும்மேன்மையானபன்னீர்விலைசீசாஒன்றுக்குஅணா 8 விபீசெலவு1 முதல் 3 சீசாக்கள்வரையில் அணா5பிரத்தியேகம்

கேசர்பவுடர்—இது ஓர்விதமான விலைபெற்ற சுகந்தகலவை,இதிற்கொஞ்சமெடுத்துத் தண்ணீரிற்கலந்தாவது நல்லதொரு சந்தனத்திற் கலந்தாவது தேகத்திற்பூசினுல் எல்லாரும் புஷ்பத்தக்கபரிமளத்தைத்தரும் கலியாணம் முதலிய சுபகாரியங்களுக்கு இதை அவசியமாகஉபயோகிக்கவேண்டியது இதன் இன்பமானசுகம் உபயோகித்தவர்களுக்குத்தான் தெரியும் ஆனந்தத்துடன் மனோரம்மியமான இச் சிரேஷ்டமானகலவையைச்சேர்த்துக்கொண்டால் சந்தனத்தில் அத்தர் பன்னீர் குங்குமப்பூமுதலியவாசனைகள் சேர்க்கவேண்டியதனவசியம், சீசா 1க்குவிலை அணா 8,1முதல் 6 சீசாக்கள்வரையிலனுப்ப வி பி செலவு அணா 5 பிரத்தியேகம்

ஓதிகோலோன்—இது சீமையிலிருந்துவரவழைத்ததல்ல எங்களுடைய ஔஷதசாலையில் எங்களால் சுயமாகத்தயாரிக்கப்பட்டது. மனக்களிப்பையுண்டாக்கக்கூடிய சுவாசனை உடம்பிலபூசலாம் உஸ்திரங்களுக்குப் போடலாம் இதை உபயோகித்தால் தலைவலி குணமாகும் தேகஉரமத்தைஆற்றும். வெகுநேரம் வாசனை தங்கிஉபயோகித்தவர்களைச்சுற்றிசுவாசனைபரவியிருக்கும் சாதாரணமாய்த் தண்ணீர்கலந்துகடைகளில்விற்கும் சரக்கைப்போலில்லாமல் இது ஒருசுயமான வாசனைக்கலவை, கடைகளில்விற்கும்ஓதிகோலோன் பத்துத்துளி உபயோகிக்குமிடத்தில் எம்மால் செய்து விற்றுவரும் ஓடிகோலோனை இரண்டுதுளிகள் உபயோகித்தால்போதுமானது. அரைஅவுன்சு சீசாக்களில்விற்கப்படுகிறது விலை சீசாஒன்றுக்குஅணா 8 வி பி செலவு ஒன்றுமுதல் ஆறுசீசாக்கள் வரையிலனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

குறிப்பு—இத்தஇடங்களில் மலையாளம் தெலுங்குகன்னடம் முதலிய பாஷைகள் தெரியாதவதால் ஆர்டர் செய்கிறவர்கள் தயவுசெயது தமிழிலாவது இங்கிலீஷிலாவது அடியில்குறித்த விலாசத்துக்கு விபரமாக எழுதிப்பெற்றுக்கொள்ளக் கோருகிறேன்.

பரிசுத்தமான தேன்.

காடுகளிலிருந்து ஸ்பெஷலாய் எங்களால்நியமிக்கப்பட்ட வேலைக்காரர்களால் சேகரிக்கப்பட்டது. கடைகளில்விற்கும் வெல்லப்பாகைகலந்த தண்ணீர்போன்றதேனல்ல, இத்தேன் மிகவும்தடிப்பாகவும், திக்காகவும், சுத்தமாகவுமிருக்கும். கலப்பில்லாத அப்பட்டமான சரக்கு. மேலும் வைத்தியசாஸ்திர முறைப்படிக்கு எங்களால்சுத்தியும்செய்யப்பட்டு விற்கப்படுகிறது. கடைகளில்விற்கும் தேன் ஒருசேர்சேர்க்குமிடத்தில் எம்மால் விற்கப்படும் தேன் 4 துளிகள் உபயோகித்தால் போதுமானது இப்படிப்பட்ட மேலானவும், சுத்தமானவும், சுயமானவும், சரக்கு கிடைப்பதரிது. மருந்துகளை இத்தேனுடன் அனுபானித்து உட்கொண்டால் மருந்துகளின்வீரியமும், குணமும் அதிகரிக்கச்செய்யும்.

விலை டின் 1-க்கு அணா 12 ஒன்று அல்லது இரண்டு டின்கள்வரையிலனுப்ப வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

எனது விலாசம்
பி. சுப்பராய்
ஆயுர்வேதஔஷதசாலை
ஸ்ரீ வெங்கடேசபெருமாள்கோவில் சன்னதி
தஞ்சாவூர்

☞ MV ADDRESS
P. SUBBRAOY
Ayurvedic Pharmy
Sri Venkedasa
Perumal Koil
Sannathy
Tanjore

அதிசயமான உபகார வெகுமதி.

டக்டர்கள், நியாயதுரந்தரர், வியாபாரிகள், முதலாளிகள், ஐசுவரியவான்கள், வறியவர்கள், பிச்சைக்காரர், திருடர் முதலியவர்களுக்கு ஒரு லீவர் கெடியாரத்துடன் மாணவருடைய ஒருரூபா விலையுள்ள சம்பாஷணைப் புஸ்தகம் ஒன்றும் மாணவருடைய 12 அணு விலையுள்ள நிக்கல் சேசு ஒன்றும் இனுமாகக் கொடுக்கப்படும். மூன்றுவருடங்களுக்கு உத்தரவாதம். முழுதும் நிக்கல்வெள்ளியாற் செய்யப்பட்டதும் 36 மணித்தியாலத்துக்கு ஒருமுறை சாவிகொடுப்பதும் நல்லாய் நேரங்காட்டுவதும் சுத்த நிக்கல்வெள்ளியாற்செய்த திறந்தமுகமுள்ளதும் சாவியில்லாததும் பெலனுள்ள கண்ணாடியுள்ளதுமான ஓர் கடிகாரம் பின்வரும் வெகுமதியுடன் விலை ரூபா 3 அணு 4 க்குக் கொடுக்கப்படும். பாக்கிங் தபாற்செலவு 4 அணு மேலதிகம்.

இனும் விபரம்.

மாணவரின் சம்பாஷணைப் புஸ்தகம்—இது இந்தியமாணவர் தம்மெண்ணங்களை உபாத்தியின் உதவியின்றி விளக்கமாயும் சரியாயும் வழக்கமான பாஷையிற்பேசப் படிப்பிக்கும்.

மாணவரின் சேஸ்—இது நிக்கல்வெள்ளியாற் செய்யப்பட்டது. அகலத்தில் ஒருபென்சில் அளவிருக்கும். ஆனல் அதிலும் நீளம்குறைவு. ஒருபென் ஹோல்டர் நாக்குடனிருக்கும். ஒருபென்சிலும் எழுத்தழிக்கிற றபரும் உள்ளது. தேவையானநேரம் வெளியில் எடுக்கவும் உள்ளேதள்ளவுங்கூடும், அலுவல் பார்க்கிறவர்களுக்குச் சிறந்த வெகுமதி. [illegible] ஆர்டர்செய்யும்போது இங்கிலீஷில் எழுதவும்.

விலாசம்—

S. Seal & Co.
No. 5 S. I. Kenderdines Lane
Bowbazar, CALCUTTA.

Jaffna Commercial Corporation Ltd
யாழ்ப்பாண வியாபார சமுதாயம்.



இச்சமுதாயத்தினர் யாழ்ப்பாணப் பிடவைச் சாய்ப்பிலும், சுன்னுகம், சங்கானை, சாவகச்சேரி, பருத்தித்துறை அனுராதபுரம், மட்டக்களப்பு என்னுமிடங்களிலுள்ள சாய்ப்புகளிலும் யாழ்ப்பாணமாதிரியாய்ச் சீமையிற் தனி உருக்கிற் செய்யப்பட்ட "பித்தல்" "[illegible]" மண்வெட்டிகள், தெருவேலை மண்வெட்டிகள், சோடிகள், பிடான்கள் விற்பனவுக்கிருக்கின்றன.

Wm Mather,
Managng Director

பாலாஜி அண்டு கம்பெனி. காசி.

புதிய சரக்குகள். சகாய விலைகள்.

உடனே எழுதுங்கள்.

காசி பட்டு துப்பட்டாக்கள்.

6—முழம் சதா வுடல் ஜரிகை துப்பட்டா 1க்கு ரூபா 8 முதல் 15 வரை.
6—முழம் ஷை புட்டா ஷை 1-க்கு ரூபா 9 முதல் 20 வரை.

காசி பட்டு சௌக்கங்கள்.

$2\frac{1}{2} \times 2\frac{1}{2}$ முழம் சம சதுர சௌக்கங்கள் சாதாவுடல் 1-க்கு ரூபா 5 முதல் 10 வரை
$2\frac{1}{2} \times 2\frac{1}{2}$ முழம் ஷை புட்டா 1-க்கு ரூபா 7—8—0 முதல் 15 வரை

பட்டு பச்சாகாணுக்கள்.

4—முழம் சாதா 1-க்கு 3—8—0 முதல் 5—0—0 வரை
4—முழம் புட்டா 1-க்கு 4—0—0 முதல் 7—0—0 வரை
3—முழம் சாதா 1-க்கு 3—4—0 முதல் 4—0—0 வரை
3—முழம் புட்டா 1-க்கு 3—12—0 முதல் 6—0—0 வரை

பீதாம்பர சேலைகள்.

$16 \times 2\frac{1}{2}$ முழம் சாதா பீதாம்பரச்சேலை 1-க்கு ரூ. 20—0—0 முதல் 100—0—0 வரை
$16 \times 2\frac{1}{2}$ முழம் புட்டா ஷை சேலை 1-க்கு ரூபா 25—0—0 முதல் 150—0—0 வரை

பெரியகேட்லாக் இனும்.

பாலாஜி அண்டு கம்பெனி, காசி.

BALAJEE & Co.
Benares City.

Printed and published by S. Tambimuttupillai at his Achuvaly Gnanapragasa Yanthira office, Achuvaly, Jaffna.